Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 3 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 13 (18.12.2002) புதன்கிழமை இதழ் : 78

**புலமைப்பரிசில் திட்டம் – 2003**

**விண்ணப்ப முடிவு திகதி - 20.12.2002**

O/L 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் முடிவுத் திகதி 20-12-2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(சி-259)

# அகதிகளை திருப்பியனுப்புவது பற்றி ஆராய இந்தியத் தூதுவர் கிளிநொச்சிக்கு வருகை!

(கிளிநொச்சி)

இலங்கையிலிருந்து யுத்த நடவடிக்கைகள் காரணமாக வெளியேறி, தமிழகத்திற்குச் சென்று, அங்கு அகதிகளாகத் தங்கியிருக்கும் 60,000 இற்கும் அதிகமான ஈழத்தமிழர்களை திருப்பியழைப்பது பற்றி ஆராயும் முக்கிய கூட்டமொன்று, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கிலுள்ள உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் செயலகத்தில் (சிறான்) நடைபெறவுள்ள இக்கூட்டத்தை, அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் ஒழுங்குசெய்துள்ளது.

இக்கூட்டத்தில் சிறான் பணிப்பாளர் மற்றும் பிரதிப்பணிப்பாளர்களுடன் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க், இந்தியத்தூதுவர் நிருபம் சென், ஜப்பானியத் தூதுவர் செய்சுரோ ஒட்சுகா, அரசின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் பேணாட் குணதிலக, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, வன்னி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர், துறைமுக கப்பற் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் - அகதிகளைத் தாயகம் திருப்பியழைப்பது பற்றிய அணுகுமுறை, அது தொடர்பான செயற்பாடுகள், நாடு திரும்புவோருக்கான மீள்குடியேற்றம், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிகள் உட்படப் பல விடயங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டையில் நேற்றிரவு பயங்கரம்

# பெரும் தீ விபத்து; 9 தமிழர்கள் பலி!

## அடுக்கு மாடியினுள் பலர் சிக்குண்டனர்

(கொழும்பு நிருபர்)

**கொழும்பு ஐந்து லாம்படிச்சந்தியில் உள்ள சேகர் கட்டிடத்தில் நேற்றிரவு 8.45 மணியளவில் தீப்பற்றிக்கொண்டமையினால் 9 தமிழர்கள் எரிந்து மரணமாகினர். மேலும் 28 பேர் எரிந்து காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இறந்தவர்களில் ஐந்து பேர் பெண்கள், நால்வர் ஆண்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த செய்தி எழுதப்படும் வரை தீயணைக்கப்படவில்லை.

நான்கு மாடிக்கட்டிடம் என்பதனால், நான்காம் மாடியில் உயிருக்காக போராடிக்கொண்டிருந்தவர்களை விமானப்படை அதிகாரிகள் கூரையைப் பிரித்துக்கொண்டு உள்ளே இறங்கி காப்பாற்றினர்.

ஆனால் - 3 ஆம், 2 ஆம் மாடியில் இருப்பவர்களை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இம்மாடிக்கட்டடத்தினுள் சுமார் 40 குடும்பங்கள் வசித்து வந்தன. இந்தக்கட்டிடம் 107 வருடங்கள் பழமைவாய்ந்தது என்பதனால் அதன் தட்டுக்கள் பலகையினால் அமைக்கப்பட்டிருந்தன. கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் 30 கடைகள் உள்ளன. அவற்றில் ஒன்று பட்டாசுக்கடையாகும். பட்டாசு வெடித்ததினாலே இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். 5 தீயணைப்புப் படை வாகனங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)



## விண்ணாணம் விநாசியர்

ஒஸ்லோவுக்கு பின்னடிச்சவையள் வன்னிக்கு வரவேணுமெண்டது தான் யதார்த்தம் பார்த்தியே...

# இயக்கச்சியில் விபத்து: தாய் பலி; மகன் காயம்!

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சிப் பகுதியில் நேற்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் - வான் விபத்தில் பெண் ஒருவர் பலியாகினார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற அவரது மகன் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்றுகொண்டிருந்த இந்த 'சிபி-125' ரக மோட்டார் சைக்கிளுடன் எதிரே வந்த 'ஹைஏஸ்' வான் ஒன்று மோதியது. இதனால் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த களபூமி காரைநகரை சொந்த இடமாகவும், வவுனியா, வைரவர் புளியங்குளத்தில் வசிப்பவருமான திருமதி சிவசுப்பிரமணியம் சரஸ்வதி (வயது 50) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார். அவரது மகன் சி.யோகேஸ்வரன் (வயது 23) காயமடைந்த நிலையில் கிளிநொச்சி (12 ஆம் பக்கம் பார்க்க)



காயமடைந்த யோகேஸ்வரன்

# கிழக்கில் பெய்த கடும் மழையால் 10,000 குடும்பங்கள் இடம்பெயர்வு

(மட்டு.நகர்)

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் 10 ஆயிரம் குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து உள்ளன.



ஏறாவூர், ஓட்டமாவடி, பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால், இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் (12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கு சுவிஸ் தொடர்ந்து உதவி வரும்!

## தமிழ்ச்செல்வனுடன் அந்நாட்டுத் தூதர் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து தூதுவர், நேற்று கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவகப்பணியகத்தில், நேற்றுக்காலை 11.30 மணியளவில் சுவிற்ஸர்லாந்து தூதுவர் பெர்டானிகோறொகாசோனியுடன் தூதரக அதிகாரிகளான ஜு சிர்மன், கே.ரிமிகர், ஆகியோர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடாத்தினர்.

இப்பேச்சின்போது, கடந்த கால யுத்தசூழ்நிலையால் பாதிப்படைந்த வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மனிதாபிமான, அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும், இத்திட்டங்களுக்கு வழங்கப்படவேண்டிய நிதியினை வடக்கு-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுச் செயலகத்திற்கூடாக (சிறான்) வழங்கி, மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் பேசப்பட்டது. மேற்படி உபகுழுச்செயலகத்தின் அமைப்புமுறை மற்றும் நிர்வாக முறை குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன் - சமாதானப் பேச்சு வார்த்தையின் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்ததுடன், சமஷ்டி (12 ஆம் பக்கம் பார்க்க)

நிறஞ்சனாஸ் சங்கானை

HARRISON FORD நடித்த
**AIR FORCE - ONE**
காட்சிகள்:
11.00, 2.45, 6.00
17-12 முதல் 7.45 (பு.நே)
20-12-2002 முதல்
அர்ஜீன், தபு, சார்லி நடித்த
**தாயின் மணிக்கொடி**
11.00, 2.45, 6.00
(சி-287)

**ராஜா**
யாழ்ப்பாணம்.

18 ஆம் திகதி வரை
**வில்லன்**
10.30, 2.30
16 - 18 வரை
**UNIVERSAL SOLDIER**
(WAR FILM) 7.00 மட்டும்
(சி-262)

## மட்டு-திருமலை வீதியில் விபத்து 3 பேர் மரணம்; இருவர் காயம்!

மட்டக்களப்பு - திருமலை வீதியில் ஞாயிறு இரவு நடந்த வீதி விபத்தில் மூவர் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பிலிருந்து திருமலை நோக்கி வந்த கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ வண்டியும், திருமலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் மினிவானும் நேருக்கு நேர் மோதியதில் மேற்படி விபத்து நடந்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் எஸ். ஜீவநாயகம் (வயது 55), பிறப்பு இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் சாருமதி நாகையா (வயது 25) மற்றும் ஜீவலோஜினி சிவராசா (வயது 64) ஆகியோரே விபத்தில் உயிரிழந்தவர்களாவர்.(06)

## ஜனவரி முதல் வாகன அனுமதிப்பத்திரம் எடுத்து வராதுவிடின் சட்ட நடவடிக்கை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்குரிய காலக்கெடு கடந்த 7 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. கைது செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.யுனைட் தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரங்கள் இல்லாது வரும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும்போது, நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பொலிஸ் அதிபர் ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

### திருமலையிலும் கடும் மழை!

திருகோணமலையில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தம்பலகாமம், கிண்ணியா, நிலாவெளி, சாம்பல்தீவு, மூதூர் கிழக்கு, கட்டைபறிச்சான், சம்பூர், கூனித்தீவு, பள்ளிக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (04)

## அமைதிப் பூங்காவை வில்பத்தில் அமைக்குக!
### சமாதானச் செயற்குழு கோரிக்கை

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் உள்ளது போன்று இலங்கையிலும் ஒரு சமாதானப் பூங்காவை (Peace Park) அமைக்குமாறு பெவ்வரல் என்னும் சமாதானக் குழு அமைச்சரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய பூங்காவை அனைத்துத் தரப்பு மக்களும் செல்லக்கூடிய இடமாக, புத்தளத்திற்கு அப்பாலுள்ள வில்பத்து காட்டுப் பகுதியை தெரிவுசெய்யுமாறும் அச் சமாதானக் குழு அமைச்சரவையைக் கேட்டுளளது.



மட்டு - அம்பாறை மாவட்டங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக பெரும்பாலான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கிவருகின்றன. தொடர்ந்து பெய்துவரும் அடைமழையானது அன்றாட உணவுக்கே சிரமப்படும் மக்களையே பெரிதும் பாதித்துள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களிலேயே வசித்து வருகின்றனர். இப்பகுதிகளிலிருந்து இடம்பெயரும் மக்களையே மேலுள்ள படத்தில் காணலாம்.

**IEE Compute Division**
121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.
[கணினி மூலம் ஆங்கில மொழி] (Personal & Group Classes)
**ஆங்கிலமொழி கல்வியாண்டு-2003**
தரம் 6 - O/L வரை, பொது ஆங்கிலம் A/L (2004, 2005)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஒவ்வொரு வகுப்பிலும்
10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
ஆசிரியர்:- திரு.க.றமணதாசன்
(சி-298)

**வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்**
வதிரி, கரவெட்டி.
15-12-2002 இல் நடைபெற்ற
**அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**
1 ஆம் பரிசு - 0757 2 ஆம் பரிசு - 9950
3 ஆம் பரிசு - 0906
20 ஆறுதல் பரிசுச் சீட்டு இலக்கங்கள் -

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1097 | 7926 | 5130 | 8720 | 7094 | 5994 | 2457 |
| 7672 | 1124 | 5274 | 6943 | 8353 | 0745 | 2155 |
| 1307 | 0622 | 3489 | 0497 | 0640 | 0440 | |

(067)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
**சிறப்புத் தள்ளுபடி!**
05-12-2002 முதல் 31-12-2002 வரை மட்டுமே
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
**லைடன் புடவை நிலையம்**
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
முழுநேர விற்பனை நடைபெறும்.
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. - 2222381
(சி-322)

# STUDY IN INDIA
## Admission Notice - Year 2003

**Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE**

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

**MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)**

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

**SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)**

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

**நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???**
இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.
**3 Years Diploma in**
- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

**MUTHAYAMMAL POLYTECHNIC**
Rasipuram - 637 408, Namakkal Dt, T.N, India

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297
074-512468

## ஜெனரல் நம்பியார் தலைமையில்

# உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய

# இந்திய படையதிகாரிகள் கொழும்பு வருகை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்வதற்காக, இந்தியப் படைத் தரப்பு உயரதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

ஓய்வுபெற்ற முன்னாள் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நம்பியார் தலைமையிலான இந்தக் குழுவில் மேலும் இரண்டு உயர் மட்ட அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப்பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்ற சூழலில் வடக்குக் - கிழக்கு பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை எவ்வாறு பேணிக்கொள்வது ,என்பது குறித்த மதிப்பீடுகளைச் செய்து, இந்திய அதிகாரிகள் குழு இலங்கை அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மக்களின் மீள் குடியமர்வுக்கு வசதியாக உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு விடுதலைப் புலிகள் கோரி வருகின்றனர்.

ஆனால், அரசாங்க தரப்பு இது குறித்து இன்னமும் உறுதியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்வதற்கு அரசாங்கம், வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் சேவையைப் பெற்று வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே இந்திய உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழு இலங்கை வந்துள்ளதாகத் தெரியவருகின்றது. ஜெனரல் நம்பியார் தலைமையிலான உயர்மட்டப் படைத்தளபதிகள் குழுவினர், வடக்கு - கிழக்குப் பகுதிகளில், குறிப்பாக யாழ். குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை நேரில் பார்வையிட்டு மதிப்பீடுகளைச் செய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - பிரித்தானிய முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் டெனிஸ் றோஸ்- யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு நிலை குறித்தும், உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்தும் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இங்கு வந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலேரியா நோய்க்கு விரைவில் புதிய தடுப்பு மருந்து அறிமுகம்

## ஜேர்மனிய மருத்துவ சஞ்சிகை தகவல்

மலேரியா நோய்க்குப் புதிய தடுப்பு மருந்து ஒன்றை மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளதாக, ஜேர்மனிய மருத்துவ சஞ்சிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மலேரியா நோயைத் தடுப்பதற்கு இம்மருந்து பயன்படும் என்றும், தற்போது பயன்படுத்தப்படும் மருந்துகளை விட இது மிகவும் சிறந்த தடுப்பு மருந்தாக அமையும் என்றும் அம்மருத்துவ சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது இந்த மருந்து பாதுகாப்பானதுதானா என்பதைக் கண்டறியும் இறுதிக்கட்டப் பரிசோதனைகளில் இருப்பதாகவும், மேலும் சில பரிசோதனைகள் நடத்தப்பட்டதும் இதனை பாவனைக்கு அனுமதிப்பது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இம்மருந்து இதுவரை சிறுவர்களுக்கு வழங்கிப் பரிசோதிக்கப்படவில்லை. ஆபிரிக்காவில் மலேரியாவின் தாக்கம் அதிகமுள்ள நாடான கபோனில் இந்த மருந்து பரிசோதிக்கப்பட்டதாகவும், இதில் 90 சதவீதமானவர்கள் இரண்டு வாரங்களில் பூரண சுகம் பெற்றதாகவும் அம்மருத்துவ சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

## இராணுவ நீதிமன்றில் 12 கடற்படையினர்

இத்தாலிக்கு சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்திய படகுகளிடம் கப்பம் பெற்றதாக, கைது செய்யப்பட்டுள்ள, பன்னிரெண்டு கடற்படையினரும் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர். ஆட்களை இத்தாலிக்குக் கடத்துவதற்கு உதவியதாகக் கைது செய்யப்பட்ட 12 கடற்படையினரும் குற்றப்புலனாய்வுப் பொலிசாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இராணுவச் சட்டக் கோவைகளின் பிரகாரம், இவர்கள் குற்றமிழைத்திருப்பதால் இராணுவ நீதிமன்றம் ஊடாக இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## றப்பர் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற

# 69 கோடி ரூபா மோசடி தொடர்பாக முன்னாள் பிரதமர் விசாரணையில் !

(கொழும்பு)

இலங்கை றப்பர் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற சுமார் 69 கோடி ரூபா மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸார், முன்னாள் பிரதமரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரமுகருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கவை விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

பெருந்தோட்டத்துறை அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்க இருந்தபோது, அவரது பொறுப்பின் கீழ் இலங்கை றப்பர் கூட்டுத்தாபனம் இருந்தது. அப்போது திறைசேரி, கூட்டுத்தாபனத்துக்கு 90 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தது.

திறைசேரியால் ஒதுக்கப்பட்ட 90 கோடி ரூபாவில், 54 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டிருப்பது விசாரணைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை, மேலும் 15 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை எனவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஊழல் மோசடிகள் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார், அப்போது கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாக இருநத அமைச்சர் என்ற வகையில், இந்த மோசடி குறித்து ரத்னசிறி விக்கிரம நாயக்கவிடம் விசாரணைகளை மேற் கொள்ளவுள்ளனர்.

இதற்காக பொலிசார் முன்ன ஆஜராகும்படி முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கின்றது.

# மட்டு - கொழும்பு ரயில்சேவை அடுத்த மாதம் ஆரம்பமாகும்!

(கொழும்பு)

கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான நேரடி ரயில் சேவைகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாகச் சீர்குலைந்திருந்த மட்டு - கொழும்பு ரயில் சேவையை மீண்டும் வழமை போல நடத்துவதற்காக, வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் ரயில் பாதையைத் திருத்தியமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ரயில் பாதையைத் திருத்தியமைக்கும் பணிகள் இம்மாத்த்துடன் முடிவடைந்து விடும் என்றும், அடுத்த மாதம் ரயில் சேவைகளை மட்டக்களப்பு வரை நீடிக்க முடியும் என்றும் ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. மட்டக்களப்புக்கான ரயில் பாதைகளைத் திருத்தியமைக்கும் பணிக்கு நோர்வே மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியன உதவிகளை வழங்கயுள்ளன.

தற்போது வாழைச்சேனை வரை மட்டுமே ரயில் சேவைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# ‘கடலோரக் காற்று’ தாயகத்திரைப்படம் பிரான்ஸ் மாவீரர் நிகழ்வில் வெளியீடு

(பாரிஸ்)

பிரான்ஸில் கடந்த வாரம் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் - ஏழாயிரத்துக்கும் அதிகமான மக்கள பங்கேற்றதுடன் மிகவும் உணாவுபூர்வமாக நடந்தது.

பாரிஸ் நகருக்கு அருகேயுள்ள மசிபலசோ என்னும் நகரிலுள்ள, பிரமாண்டமான மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன், புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவான் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழீழத் தேசியக் கொடியை சேரலாதன் ஏற்றி வைக்க - மாவீரர்களின் பெற்றோரும், உரித்துடையோரும், மக்களும் ஈகச்சுடரேற்றினர்.

இசை நிகழ்வுகளை பிரான்ஸ் தமிழ்க் கலைஞர்கள் கூட்டாக இணைந்து வழங்க, தமிழர் கலை பண்பாட்டுக் கழக நாடகக் கலைஞர்கள் ‘எழுதாத உடன்பாடு’ எனும் நாடகத்தை நிகழ்த்தினர்.

சோதியா கலைக் கல்லூரி, வெச்றோன் - ஒல்னிசுபா தமிழ்ச் சோலை மாணவிகள் நடன நிகழ்வுகளை நடாத்தினர்.

“கடல் எழுந்த கதை” எனும் தமிழர் கடற்பலம் பற்றிய நடன வடிவிலான நடன நாடகம் இடம் பெற்றது.

தாயகத்தில் வெளியிடப்பட்ட ‘கல்லறை தழுவிய கீதங்கள்’ எனும் இசைத்தட்டு இங்கு மீள் வெளியீடு செய்யப்பட்டது.

தாயகத் தில் தயாரிக்கப்பட்ட “கடலோரக காற்று” எனும் திரைப் படமும் இந்நிகழ்வில் வைத்து வெளியிடப்பட்டது. நிசர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் இந்நிகழ்வுககுத் தலைமை தாங்கிப் பேசுகையில்,

-முதற்தடவையாக தாயகத்திற்கு வெளியே வெளியிடப்பட்டுள்ள தமிழீழத் திரைப்படம் இது எனத் தெரிவித்தார்.

இத்திரைப்படத்தின் உதவி இயக்குனரும், ஒளிப்பதிவாளருமான கிருபா- போராளிக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்கள் சார்பில் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

அவருக்கு விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பணிமனைப் பொறுப்பாளர் கௌரவப் பதக்கத்தினை வழங்கினார்.



ஒவ்வொரு வேளையும் சூடான உணவு, பானங்களை பாவியுங்கள்.

~ தமிழீழ சுகாதார சேவை.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கிளிநொச்சி திட்டமிடல் பணிப்பாளராக பதவியுயர்வு

(அச்சுவேலி)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடற் பணிப்பாளராகக் கடமையாற்றிய என்.மகேந்திரன் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு திட்டமிடற் பணிப்பாளராகப் பதவியுயாவு பெற்றுச் சென்றுள்ளார். (76)

### 12 வருடங்களின் பின் திருவெம்பாவை பூஜை

புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோயிலில் கடந்த 12 ஆண்டுகளாகத் திருவெம்பா பூஜை நடைபெறாமல் இருந்தது. தற்போது அவ்வாலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதை அடுத்து திருவெம்பாவை பூஜை அதிகாலை 5 மணிக்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### நூல்களின் பட்டியல்கள் தர கோரிக்கை

(கொக்குவில் மேற்கு)

புனரமைக்கப்படும் யாழ். பொது சன நூலகத்திற்கு அமெரிக்க போர்ட் பவுண்டேசன் நிறுவனம், யுனெஸ்கோ நிறுவனமும் இணைந்து நூல்கள், பருவ வெளியீடுகள், தொழில்நுட்ப உதவிகள் என்பவற்றை வழங்கவுள்ளன.

எனவே- அவர்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடிய நூல்கள் பற்றிய விபரங்களை வாசகர்கள், கல்விமான்கள் மற்றும் மாணவர்களிடம் இருந்து நூல்களின் பட்டியலை எதிர்பார்ப்பதாக பிரதம நூலகர் அறிவித்துள்ளார். (108)

### பாதீனியத்தை கட்டுப்படுத்த 27 பேர் கொண்ட குழு

வவுனியா மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் பாதீனியம் செடியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவென வவுனியா மாவட்டச் செயலகம் 27 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளது. இவர்களுக்கான உதவிகளை வழங்க பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் உதவிகளை வழங்கவுள்ளனர்.

இப்பாதீனியச் செடிகளினால் வவுனியா மாவட்டத்தில் பயிர்ச் செய்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. (34)

### தபாலகம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தபாலகம் நேற்று முன்தினம் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது.

கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் அமைக் கப்பட்ட இக் கட்டடத்தினை பதில் அஞ்சல் மா அதிபர் எஸ். ஜெயரட்ணம் திறந்து வைத்தார்.

அஞ்சல் அதிபர் வில்வராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதேச அஞ்சல அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச)

### ஆங்கில தேசிய டிப்ளோமா பரீட்சைப் பெறுபேறு

2001 ஆம் ஆண்டுக்கான ஆங்கில தேசிய டிப்ளோமா கற்கை நெறியின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறு, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.

யாழ்.உயர்தொழில் நுட்ப நிறுவனத்திலிருந்து தோற்றியோருள்- சி.அன்ரன் ஜெயராஜ், சீ.சுதர்சினி, நி.மஞ்சுளா, பா.தாமரைச்செல்வி, எஸ்.லக்ஷ்மபிரியா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர் என உயர் தொழில்நுட்ப நிறுவன பதில் பணிப்பாளர் வே.கருணாநிதி அறிவித்துள்ளார்.

### யாழ். குடாநாட்டில்

# தபால் திணைக்களத்தில் பணியாற்றும் 61 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம்

இலங்கையில் தபால் திணைக்களத்தில் நிலவிவரும் வெற்றிடங்கள் அடுத்த ஆண்டில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

நாடு முழுவதும் தபால் திணைக்கள அலுவலகங்களில் 308 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு 61 பேர் நியமிக்கப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படவுள்ள தபால் ஊழியர்களுக்கான நேர்முகப்பரீட்சை ஜனவரி 2 ஆம் வாரத்தில் நடாத்தப்ப டும். இதற்காக நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

பெப்ரவரி மாத முற்பகுதியில் புதிதாக நியமனம் பெறுவோருக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வருட நடுப்பகுதியில் நடத்தப்பட்ட சிற்றூழியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே வெற்றிடங்களுக்கு நிரப்பப்படவுள்ளனர். (ச)

### எழுதுமட்டுவாழின் அவலம்

# அழிந்த தோட்டங்கள் சிதைந்துபோன வீடுகள்

(நாவற்காடு)

எழுதுமட்டுவாழ வடக்குப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்கள் பாரியளவில் அழிவடைந்துள்ளதுடன் அங்குள்ள வீடுகளும் இடிக்கப்பட்டும், கூரைகள் அகற்றப்பட்டும் காட்சியளிப்பதாக அங்கு சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

தெங்கு செய்கையாளர் சங்கத்தால் வழங்கப்பட்ட தென்னை அழிவின் விபரங்களைச் சேகரிக்கும் படிவத்தைப் பூரணப்படுத்தும் பொருட்டு, அப்பகுதிக்கு விஜயம் செய்த கிராம அலுவலர் மற்றும் தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்கள் அப்பகுதியின் நிலை குறித்து நேரடியாகப் பார்வையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (92)

# 42 மக்கள் வங்கி ஊழியர்கள் உதவி முகாமையாளராக பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் வட பிரதேச கிளைகளில் பணியாற்றும் 42 ஊழியர்கள் உதவி முகாமையாளர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

பதவி உயர்வு பெற்றவர்களில் 33 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய 9 ஊழியர்களும் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது.

# திக்கம் வடிசாலையை ஒப்படைக்கக் கோரி வடமராட்சி கொத்தணி மறியற்போராட்டம்!

### இன்று முதல் பனை அபிவிருத்திச் சபை தலைமையகம் முன்பாக

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை மீண்டும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாகிய வடமராட்சி, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் ஒப்படைக்கக்கோரி, இன்றுமுதல் பனை அபிவிருத்திச் சபையின் தலைமையகம் முனபாக தொடர் மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டம் குறித்து வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

திக்கம் வடிசாலை எமது நிர்வகிப்பில் இருந்தமை யாவரும் அறிந்த விடயமே. அரச, அரச சார்பற்ற உடல் உழைப்பாளர்களான தொழிலாளர்களின் வடிசாலை, எட்டு வருடங்களாக ஜனநாயக முறையிலான தொழிலாளர்களின் நிர்வாகத்தின் மூலம் தேடிவைத்த, 600 லட்சம் பெறுமதியான சொத்துக்கள் கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதி, அன்றைய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆயுத முனையில் பறித்தெடுக்கப்பட்டது.

ஆனால் - பறித்தெடுத்தவர்களின் ஆட்சிக்காலம் முடிந்த பின்னரும், இவ்வடிசாலையை மீளவும் எமது கையில் பெற்றுத் தருவோம் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தவர்களும் ஒருவருடமாகியும் எமது கோரிக்கைகளை பலமுறை தெரியப்படுத்தியும் இன்றுவரை வடிசாலையை எம்மிடம் ஒப்படைக்கும் சிந்தனை அற்றவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இநநிலையில் வடிசாலையல், எமது உற்பத்தியால் எமக்குக் கிடைக்க வேண்டிய பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் யாருக்கோ பயன்படுத்தப்படுவதாக செய்தி ஊடகங்கள் மூலம் அறிய முடிகிறது. இந்நிலை தொழிலாளர்களாகிய எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது.

இதனாலேயே எமது தொழிலாளர்களை இணைத்து ஓர் எழுச்சிப் போராட்டத்தினை இன்றுமுதல் யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம் முன்பாக நடாத்த திட்டமிட்டுள்ளோம்

- என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (லி)

# எயிட்ஸ் நோய்க்கும் மருந்து கண்டுபிடிக்க சித்த மருத்துவ ஆய்வுகள் நடக்கின்றன

### சுன்னாகம் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் உரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் நூற்றுக்கு மேற்பட்ட புதிய மருந்துகளை உருவாக்கியுள்ளது. தற்போது பலரின் வேண்டுகோளுக்கிணங்க எயிட்ஸ நோய்ச் சிகிச்சைக்காக, சித்த மருந்துகளில் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதுடன், சுகவாழ்வே சிறந்த செல்வம் என்ற கோட்பாட்டினை வலியுறுத்திச் செயற்பட்டும் வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தலைமையுரை ஆற்றிய நிலையத்தின் தலைவர் பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையின்போது - இரத்தச் சுற்றோட்ட நோய், மதுமோகம், சிறுநீரக நோய் ஆகியவற்றுக்கு சித்த மருத்துவம் புதிய மருந்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது போல, எயிட்ஸ் நோய்க்கும் புதிய மருந்து கண்டுபிடிக்கவுள்ளது எனவும், இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு பயனடைய விரும்பும் நோயாளர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் - இளைப்பாறிய அதிபா கந்தையா, சி.கதிரிப்பிளளை, சோமசேகரம் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


2005 A/L

கணித, உயிரியல் பிரிவு

நாளை (வியாழன் - 19.12.2002)

ஆரம்பம் - காலை 8.30 மணி

எமது வழமையான ஆசிரியர் குழு



(சி-321)



# மாணவர் மலர்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்

### அறிவுறுத்தல்


பரீட்சை வினாக்கள் தயாரிக்கப்படும் முறையை நாம் தெரிந்து கொண்டால் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. இப்பகுதியில் நாம் தரும் வினாக்கள் மிகவும் இலகுவானவை. ஆசிரியரின் வழிப்படுத்தலுடன் மாணவர்கள் பயிற்சி செய்தல் வேண்டும் என்பதை நினைவிற்கொள்க. எனவே மாணவர்களை வழிப்படுத்துபவருக்கு பரீட்சை முறை பற்றிய தெளிவு அவசிய மாகும்.

### வினாத்தாள்-1


✹ அவதானிப்பு (OBSERVATION)

❖ கிழே தரப்பட்டுள்ள வினாக்களில் உள்ள மூன்று உருவங்கள் ஒத்த தன்மையுடயவை. இந்த உருவங்களோடு ஒத்திராத உருவத்தின் கீழ் கோடிடுக.

1.




2.



✹ வெளித் தொடர்புகளை இனங்காணல் (SEEING SPATIAL RELATIONSHIPS)


❖ கீழே தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருவங்களுடன் மிகநெருங்கிய தொடர்பினை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழ் கோடிடுக.

1.



1.பறவைகள், வியாபாரிகள், மருந்து
2.மரப்பலகை, மருந்து, உணவு
3.விலங்கு, நிழல், மரப்பலகை

2.



1. வியாபாரி, அதிபர், பெற்றோர்
2. கடதாசி, தொழிற்சாலைகள், விளையாட்டு
3. கற்றல், மாணவர், ஆசிரியர்

✹ காரண காரியங்களை இனங்காணல் (IDENTIFICATION OF CAUSE AND EFFECT)


❖ கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் உள்ள கூற்றுக்களை வாசியுங்கள். ஒவ்வொரு கூற்றும் எப்போதும் உண்மையாக இருக்குமெனில் (✓) அடையாளத்தையும் சிலவேளைகளில் மட்டும் உண்மையாக இருக்குமெனில் (✕) அடையாளத்தையும் புள்ளிக் கோட்டின் மீது அடையாளம் இடுக.

1. ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளை விட அதிக உடற்பலம் உள்ளவர்கள். (...........)
2. மீன்கள் நீரில் வாழும். (...........)
3. ஒரு முக்கோணிக்கு மூன்று பக்கங்கள் உண்டு. (...........)
4. மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் ஆகியன மரத்தால் செய்யப்படும். (...........)


✹ மொழிபெயர்ப்பு (TRANSLATION)

❖ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான வாக்கியத்தை அமைப்பதற்குப் பொருத்தமான குறியீட்டு உருவின் கீழே கோடிடுக.

இவை வாக்கியங்களை அமைக்க உதவும் குறியீட்டு உருவங்களாகும்.




1.




2.




3.





4.





✹ கோலங்களின் புலக்காட்சி (PERCEPTION)

❖ கீழே தரப்பட்டுள்ள வினாவில் காட்டப்பட்டுள்ள படத்தில் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது. அந்த இடைவெளியில் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



✹ வரைவிலக்கணம் (DEFINITION)

❖ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழக் கோடிடுக. தரம் ஐந்து மாணவர் ஒருவரின் வீட்டில் 10 நாட்களில் பூத்த சிவப்புநிறப் பூக்களினதும் மஞ்சள்நிறப் பூக்களினதும் தொகை இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளது. சிவப்புநிறப் பூக்கள் முறிகோட்டினாலும் மஞ்சள்நிறப் பூக்கள் நேர் கோட்டினாலும் காட்டப்பட்டுள்ளன.




சிவப்புப் பூக்களும், மஞ்சள் பூக்களும் சமனான எண்ணிக்கையில் பூத்த இரண்டு நாட்களும் எவை?

(1) 3 உம் 7 உம் (2) 5 உம் 10 உம் (3) 4 உம் 6 உம்

9 ஆம் நாள் பூத்த சிவப்புப் பூக்களுக்கும், மஞ்சள் பூக்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

(1) 20 (2) 25 (3) 30

இந்தப் பத்து நாட்களிலும் பூத்த சிவப்புப் பூக்களினதும், மஞ்சள் பூக்களினதும் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(1) 1500 (2) 1600 (3) 1700

✹ அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் (FOLLOWING INTRUCTIONS)

❖ கீழே தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.



குறிப்பு:- படம் பார்த்து விடை எழுதும்போது எப்போதும் நிகழ்காலத்திலேயே எழுதவேண்டும் என்பதை நினைவிற் கொள்க. தரம் மூன்று ஆசிரியர் கைந்நூலின் 52 ஆம் பக்கத்தை ஒருமுறை பார்வையிடுக.

(தொடரும்)

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.
(ஆசிரியர், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி)




## இரசாயனச் சமன்பாடுகளை ஈடு செய்தல் *(தொடர்ச்சி)*

### ஒட்சியேற்ற எண் மாற்றமுறை

இரசாயனச் சமன்பாடுகளை எழுதுவதற்கு முன் - ஒட்சியேற்றுங்கருவியின் தாழ்த்தப்பட்ட நிலையையும், தாழ்த்தும் கருவியின் ஒட்சியேற்றப்பட்ட நிலையும் அறியப்படுதல் வேண்டும்.

அவ்வாறு அறியப்பட்டிருப்பின் அவற்றைக் கொண்டு, பரும்படியான சமன்பாடு ஒன்றை எழுதுதல் வேண்டும்.

*உதாரணம்:* ஐதரசன் சல்பைட்டு வாயுவுக்கும் நைத்திரிக் அமிலத்துக்குமான தாக்கத்தில், ஐதரசன் சல்பைட்டு - கந்தகமாக ஒட்சியேற்றப் பட, நைத்திரிக்கமிலம் - நைத்திரிக் ஒட்சைட்டாக தாழ்த்தப்படுகிறது. பரும்படியான சமன்பாட்டை எழுதுதல்.

$$H_2S_{(g)} + HNO_{3(aq)} \rightarrow S_{(s)} + NO_{(g)}$$

ஒட்சியேற்ற எண்ணில் மாற்றம் ஏற்படும் மூலகங்களின் ஒட்சியேற்ற எண்களைக் குறித்தல்.

$$H_2S + HNO_3 \rightarrow S + NO$$

| | $H_2S$ | $HNO_3$ | $S$ | $NO$ |
|---|---|---|---|---|
| ஒட்சியேற்ற எண் | -2 | +5 | 0 | +2 |

ஒட்சியேற்ற எண் மாற்றங்களை இடது பக்கத்தில் குறித்தல்.

ஒட்சியேற்ற எண்மாற்றம் 2 3

ஒட்சியேற்ற எண் மாற்றங்களை ஈடுசெய்யக்கூடியதாக ஒட்சியேற்றும், தாழ்த்தும் கருவிகளின் குணகங்களை தேர்ந்தெடுத்தல்.

$$3H_2S + 2HNO_3 \rightarrow S + NO$$

O, H தவிர்ந்த ஏனைய அணுக்களை ஈடுசெய்தல்

$$3H_2S + 2HNO3 \rightarrow 3S + 2NO$$

O ஐ ஈடுசெய்ய, எதிர்ப்புறத்தில் நீரைச் சேர்த்தல்.

$$3H_2S + 2HNO_3 \rightarrow 2S + 2NO + 4H_2O$$

ஐதரசன் ஈடுசெய்யப்படுகிறது.

இங்கு சேர்வைகளில், மூலகம் ஒன்று ஒட்சியேற்றப்படுகிறது அல்லது தாழ்த்தப்பட்டுள்ளது.

கீழ்வரும் தாக்கத்தில் சேர்வையொன்றிலுள்ள மூலகம் ஒன்று தாழ்த்தப்பட்ட நிலையிலும், தாழ்த்தப்படாத நிலையிலும் காணப்படுமாயின், அவற்றுக்கான ஒட்சியேற்ற எண் மாற்றங்களை வலதுபக்கம் மேற்கொள்ள வேண்டும்.

*உதாரணம்:* கொப்பர், ஐதான நைத்திரிக்கமிலத்துடன் தாக்கம் புரிந்து கொப்பர்(II) நைத்திரேற்றையும், நைத்திரிக் ஒட்சைட்டையும் பிரதான விளைவுகளாகத் தருகிறது. மேற்கூறிய தாக்கத்துக்கு பரும்படியான சமன்பாட்டொன்றை எழுதுதல்.

$$Cu_{(s)} + HNO_{3(aq)} \rightarrow Cu(NO_3)_{2(aq)} + NO_{(g)}$$

வலது பக்கத்தில் நைதரசன் தாழ்த்தப்பட்ட நிலையில் **NO** ஆகவும், தாழ்த்தப்படாத நிலையில் $NO_3^-$ ஆகவும் - $CU(NO_3)_2$ இல் காணப்படுகிறது. ஒட்சியேற்ற எண்ணில் மாற்றம் ஏற்படும் மூலகங்களின் ஒட்சியேற்ற எண்களைக் குறித்தல்.

$$Cu + HNO_3 \rightarrow Cu(NO_3)_2 + NO$$

| | $Cu$ | $HNO_3$ | $Cu(NO_3)_2$ | $NO$ |
|---|---|---|---|---|
| ஒட்சியேற்ற எண் | 0 | +5 | +2 | +2 |
| ஒட்சியேற்ற எண்மாற்றம். | | | 2 | 3 |

ஒட்சியேற்ற எண்மாற்றங்களை ஈடுசெய்யக்கூடியதாக வலதுபக்கத்தில் ஒட்சியேற்றப்பட்ட தாழ்த்தப்பட்ட விளைவுகளின் குணகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

$$Cu + HNO_3 \rightarrow 3Cu(NO_3)_2 + 2NO$$

O, H தவிர்ந்த ஏனைய அணுக்களை இருபக்கமும் ஈடுசெய்தல்.

$$3Cu + 8HNO_3 \rightarrow 3Cu(NO_3)_2 + 2NO$$

O ஐ ஈடுசெய்ய எதிர்ப்புறத்தில் நீர் சேர்த்தல்

$$3Cu + 8HNO_3 \rightarrow 3Cu(NO_3)_2 + 2NO + 4H_2O$$

H ஐ ஈடுசெய்தல்

$$3Cu + 8HNO_3 = 3Cu(NO_3)_2 + 2NO + 4H_2O$$

*உதாரணம்:-*

அமில ஊடகத்தில் $KMno_4$, சோடியம் ஒட்சலேற்றை, $CO_2$ ஆக ஒட்சியேற்றுகிறது. இத்தாக்கத்தைக் குறிக்கும் ஈடுசெய்யப்பட்ட அயன் சமன்பாடொன்றினைப் பெறுதல்.

பரும்படியான சமன்பாட்டை எழுதுதல்.

$$MnO_4^- + C_2O_4^{2-} \rightarrow Mn^{2+} + Co_2$$

| | $MnO_4^-$ | $C_2O_4^{2-}$ | $Mn^{2+}$ | $Co_2$ |
|---|---|---|---|---|
| ஒட்சியேற்ற எண் | +7 | +3 | +2 | +4 |
| ஒட்சியேற்ற எண் மாற்றம் | 5 | 2x1 | | |

(இரு காபன் அணுக்களாதலால், ஒட்சியேற்ற எண் மாற்றத்தை இரண்டால் பெருக்குதல் வேண்டும்)

ஒட்சியேற்ற எண் மாற்றங்களை ஈடுசெய்யக்கூடியதாக ஒட்சியேற்றுங் கருவி, தாழ்த்தும் கருவிகளின் குணகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

$$2MnO_4^- + 5C_2O_4^{2-} \rightarrow Mn^{2+} + CO_2$$

O, H தவிர்ந்த ஏனைய அணுக்களை ஈடுசெய்தல்.

$$2MnO_4^- + 5C_2O_4^{2-} \rightarrow Mn^{2+} + CO_2$$

O ஐ ஈடு செய்ய நீரை எதிர்ப்புறத்தில் சேர்த்தல்.

$$2MnO_4^- + 5C_2O_4^{2-} \rightarrow 2Mn^{2+} + 10CO_2 + 8H_2O$$

H ஐ ஈடுசெய்ய எதிர்ப்புறத்தில் $H^+$ ஐ சேர்த்தல்.

$$2MnO_4^- + 5C_2O_4^{2-} + 16H^+ \rightarrow 2Mn^{2+} + 10CO_2 + 8H_2O$$

(இரு பக்கமும் நிகர ஏற்றங்கள் சமனாக இருக்கும்)


**வ.சி.சிவசுப்பிரமணியம்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்,**
**(விஞ்ஞானம்),**
**வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்.**


## க.பொ.த. உயர்தரம்

### சிறு குறிப்பு




#### கம்பனியின் ஒதுக்கம்

கம்பனி ஒன்று உழைத்த இலாபங்கள் அல்லது ஏனைய மிகைகளிலிருந்து பங்கு இலாபமாகச் செலுத்தப்படாது குறித்த சட்டத்திற்கமைவாகவும் அல்லது ஏனைய தேவைகளுக்கமையவும் ஏற்பாடு செய்து பேணப்படும் மிகை, ஒதுக்கம் எனப்படும்.

ஒதுக்கத்தின் வகை

1. மூலதன ஒதுக்கம்.
2. வருமான ஒதுக்கம்.

மூலதன ஒதுக்கம்

எவ்வகையான சந்தர்ப்பத்திலும் கம்பனியின் இலாப நட்டக் கணக்கின் மூலம் பங்குஇலாபமாக பிரித்து வழங்கமுடியாத ஒதுக்கம், மூலதன ஒதுக்கம் எனப்படும்.

1. பங்குவட்டம்
2. உருவாக்கலுக்கு முன் இலாபம்.
3. மூலதன வட்டி ஒதுக்க நிதியம்.
4. நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு மிகை.

வருமான ஒதுக்கம்

எவ்வகையான சந்தர்ப்பத்திலும் கம்பனியின் இலாப நட்டக்கணக்கின் மூலம் பங்குஇலாபமாக பிரித்து வழங்கக்கூடிய ஒதுக்கம், வருமான ஒதுக்கம் எனப்படும்.

1. பொது ஒதுக்கம்.
2. பங்குஇலாபம் சமப்படுத்தும் நிதி
3. இலாபநட்டக்கணக்கு செலவு மீதி.

பங்குவட்டம்

கம்பனி ஒன்று பங்குகளை முகவிலையில் விட அதிகமான விலைக்கு விற்குமாயின், மேலதிக தொகை பங்குவட்டம் எனப்படும். இவ்வட்டத் தொகையானது பங்குவட்டக்கணக்கில் பதியப்படவேண்டும் என கம்பனிச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு குறித்துரைக்கின்றது. இது ஓர் முலதன ஒதுக்கமாகும்.

பங்குவட்டம் பயன்படுத்தப்படும் தேவைகள்

1. முன்னுரிமைப் பங்குமீட்பு தொடர்பாக மீட்புவட்டம் ஈடுசெய்தல்.
2. தொகுதிக்கடன் மீட்புத் தொடர்பான மீட்புவட்டம் ஈடுசெய்தல்.
3. உபகாரப்பங்கு வழங்கல்
4. மூலதனக் குறைப்புத்திட்டத்தில் செலுத்தப்பட்ட மூலதனத்தின் ஒருபகுதியாகக் கொள்ளுதல்.
5. தொடக்கச் செலவை பதிவளித்தல்.
6. பங்குக்கழிவை பதிவளித்தல்.

உருவாக்கலுக்கு முன் இலாபம்

தனிவியாபாரம், பங்குடமை போன்ற பொறுப்பு வரையறுக்கப்படாத நிறுவனம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்களாக மாற்றியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதிக்கும், வரையறுத்த கம்பனியாக மாற்றி உருவாக்கப்பட்டுள்ளது எனக் கம்பனி பதிவாளரால் முறையாக அறிவிக்கப்பட்ட திகதிக்கும் இடையே, நிறுவனம் உழைத்த இலாபம் - உருவாக்கலுக்கு முன் இலாபம் எனப்படும். இது ஓர் மூலதன ஒதுக்கமாகும்.

உருவாக்கலுக்கு முன் இலாபம் பயன்படும் தேவைகள்

1. பங்குவட்டத்தை பயன்படுத்தக் கூடிய தேவைகள்.
2. நன்மதிப்பைப் பதிவளித்தல்.

மூலதன மீட்பு ஒதுக்க நிதியம்

வரையறுத்த கம்பனி, புதிய பங்குவழங்கலில் பெற்ற வளங்களினாலன்றி, ஏனைய வேறு வளங்களினால் உழைக்கப்பட்ட இலாபங்களிலிருந்து அதன் மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்கு மூலதனத்தை மீட்கும்போது, அவ்வாறு மீட்கப்படும் மூலதனத்தின் பெயரளவுப் பெறுமதிக்குச் சமனான ஒரு தொகையைப் பங்குஇலாபமாக பகிரத்தக்க இலாபத்திலிருந்து ஒரு விசேட நிதியத்துக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என இலங்கைக் கம்பனிச்சட்டத்தின் - 57 (11) இன் பிரிவு கூறுகின்றது. இவ் ஒதுக்கம் மூலதன மீட்பு ஒதுக்க நிதியம் எனப்படும். இது ஓர் மூலதன ஒதுக்கமாகும்.

மூலதன மீட்பு ஒதுக்க நிதி பயன்படுத்தப்படும் தேவைகள்

1. மூலதனக் குறைப்புக்காகப் பயன்படுத்தல்
2. உபகார பங்குவழங்கலுக்குப் பயன்படுத்தல்.

நிலையான சொத்து மீள்மதிப்பீடு மிகை

நிலையான சொத்துக்களின் நடைமுறைச்சந்தைப் பெறுமானத்தை கணக்கேடுகளில் காட்டும் நோக்கமாக, நிறுவன நிலையான சொத்துக்களை மீளப் பெறுமானமிடுவது, நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீடு எனப்படும். சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமானம்- சொத்தின் புத்தகப் பெறுமதியிலும் அதிகமாகக் காணப்படின், அம்மிகை - நிலையான சொத்தின் மீள் மதிப்பீட்டு மிகை அல்லது ஒதுக்கம் எனப்படும்.

நிலையான சொத்தின் மீள் மதிப்பீடு மிகை பயன்படுத்தும் தேவைகள்.

1. நன்மதிப்பு பதிவளித்தல்
2. உருவாக்கலுக்கு முன் இலாபம் பயன்படும் தேவைகள்.

பொது ஒதுக்கம்

கம்பனி இலாபநட்டக் கணக்கினூடாக ஒதுக்கி வைக்கும் தொகை பொது ஒதுக்கம் எனப்படும். இது ஓர் வருமான ஒதுக்கமாகும். கம்பனியின் வளர்ச்சியில் இவ் ஒதுக்கம் பயன்படுகிறது.

இலாப நட்டக்கணக்கு செலவுமீதி

இது பகிரப்படாது நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்தையே கருதுகின்றது. இது ஓர் வருமான ஒதுக்கமாகும்.


மு.சிவப்பிரகாசம் B.B.A. (Sp.),
கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயம்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தின் கீழ், கடன் கொடுத்தவர்களில் - குலுக்கல் மூலம் மேலும் இரண்டாயிரத்து நானூறு பேரின் பெயர் விவரங்களை, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது

இக்கடன் மீளலுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

**நேற்றைய தொடர்ச்சி....**

105). யா/யா/3663 திரு. இராஜநாயகம் பிரான்சிஸ்நீக்கலஸ்
106). யா/யா/3676 திருமதி. கோகிலராணி சிவசோதி
107). யா/யா/3779 திரு. சந்தியாபிள்ளை றெஜீஸ்
108). யா/யா/3804 திருமதி. நாகேஸ்வரி சற்குணராஜா
109). யா/யா/3923 திரு. தம்பித்துரை அருணபாலன்
110). யா/யா/3938 திரு. செல்லையா பஞ்சலிங்கம்
111). யா/யா/4013 திருமதி. சந்திரா நீக்கிலாம்பிள்ளை
112). யா/யா/4021 திருமதி.இரத்தினம்மா திருஞானசெட்டியார்
113). யா/யா/4061 திரு. பொன்னுச்சாமி பெரியசாமி
114). யா/யா/4064 திருமதி. கண்மணி சின்னத்துரை
115). யா/யா/4109 திருமதி. சிவதேவகி சிவநாதன்
116). யா/யா/4113 திரு. பிரான்சிஸ் யோசப்
117). யா/யா/4128 திருமதி. மேரிலூயிசா ஜெகநாதன்
118). யா/யா/4186 திருமதி. அழகுமாணிக்கம் ஆனந்தசிவம்
119). யா/யா/4225 திரு. கபிரியேல் மிக்கேல் யோசேப்
120). யா/யா/4240 திருமதி. அஞ்சலா சிவயோகன்
121). யா/யா/4330 திருமதி. கிறிஸ்ரபேட் துரைரத்தினம்
122). யா/யா/4333 திரு. செபஸ்தி யேசுதாசன்
123). யா/யா/4379 திரு. கணபதிப்பிள்ளை நவநாயகம்
124). யா/யா/4416 திரு. முடியப்பு மரியதாஸ்
125). யா/யா/4446 திருமதி. யோகேஸ்வரி தியாகராஜா
126). யா/யா/4461 திருமதி. வில்லி தருமலிங்கம்
127). யா/யா/4489 திரு. பரமு மாணிக்கம்
128). யா/யா/4499 திருமதி. மேரிஜெயமணி இராயப்பு
129). யா/யா/4540 திருமதி. ஜெயலட்சுமி பாலன்
130). யா/யா/4588 திருமதி. றாயினி சந்திரநாயகம்
131). யா/யா/4611 செல்வி. மைதிலி உருத்திரசிங்கம்
132). யா/யா/4664 திருமதி. திரேஸ்லூயிசா சூசைப்பிள்ளை
133). யா/யா/4679 திருமதி. செபஸ்ரீனம்மா தம்பு
134). யா/யா/4732 திருமதி. பெல்சியா பத்தினாதர்
135). யா/யா/4762 திருமதி. கனகம்மா நடராசா
136). யா/யா/4845 திருமதி. அன்னலட்சுமி பசுபதி
137). யா/யா/4849 திருமதி. அன்னமேரி நடராசா
138). யா/யா/4862 திருமதி. மனோன்மணி சின்னையா
139). யா/யா/4903 திரு. மோசஸ் எட்வேட் யோஜ்
140). யா/யா/4977 திரு. மனுவேல்பிள்ளை அந்தோனிப்பிள்ளை பிரகாசராசா
141). யா/வெ/5 திரு. இரத்தினசபாபதி சிவகுருநாதன்
142). யா/வெ/14 திரு. அருமைநாயகம் விஜயரட்ணம்
143). யா/வெ/26 திருமதி. ஜெபவதனி செல்லையா
144). யா/வெ/31 திரு. மயில்வாகனம் பரமேஸ்வரன்
145). யா/வெ/36 திருமதி. பிரியாந்தி ஜெபநேசன்
146). யா/வெ/49 திரு. அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை
147). யா/வெ/57 செல்வி. சோயாவாசுகி வேலாயுதம்பிள்ளை
148). யா/வெ/66 திரு. வைத்தியநாதன் திசைநாயகம்
149). யா/வெ/68 திரு. கதிரவேலு கனகரட்ணம்
150). யா/வெ/82 திரு. கந்தசாமி சுப்பிரமணியம்
151). யா/வெ/83 திரு. கந்தசாமி இராமகிருஷ்ணர்
152). யா/வெ/87 திருமதி. கிறிஜ்ரீனா உஷா நித்தியராஜ்
153). யா/வெ/93 திருமதி. யோகம்மா வேலுப்பிள்ளை
154). யா/வெ/105 திரு. கிறிஸ்தோப்பர் பிரான்சீஸ்
155). யா/வெ/112 திருமதி. மேகலாதேவி பொன்னுத்துரை
156). யா/வெ/116 திரு. அம்பிகாபதி அபிமன்யு
157). யா/வெ/122 திருமதி. சண்முகேஸ்வரி தியாகராசா
158). யா/வெ/132 செல்வி. சிறீறஜனி சினன்னப்பு
159). யா/வெ/135 செல்வன். பெனடிற் செல்வராஜ்
160). யா/வெ/139 திருமதி. ஏஞ்சல் விமலா செபஸ்ரியன
161). யா/வெ/140 திருமதி. மேபிள் செபஸ்ரியன்
162). யா/வெ/146 திருமதி. யசோதாதேவி சச்சிதானந்தசிவம்
163). யா/வெ/149 திரு. சண்முகானாந்தம் மனோகரன்
164). யா/வெ/153 திருமதி. ஸ்ரெலா மாட்டின்
165). யா/வெ/157 திருமதி. கமலாம்பிகை குமாரசாமி
166). யா/வெ/161 திருமதி. கமலாதேவி வருணலிங்கம்
167). யா/வெ/173 திரு. சின்னுசெட்டியார் அழகர்சாமி
168). யா/வெ/184 திருமதி. மேரியோசெலின் சின்னச்சாமி
169). யா/வெ/186 திரு. நசறயன் பாக்கியம்
170). யா/வெ/187 திரு. சவரியான் இம்மனுவல்
171). யா/வெ/188 திரு. யேசுரட்ணம் நேசம்
172). யா/வெ/190 திரு. முத்துச்செட்டியார் இராசு
173). யா/வெ/193 திரு. பர்ணாந்து புனிதசீலன்
174). யா/வெ/235 செல்வன். றவீன் றங்கன் வின்சன் ராஜி
175). யா/வெ/238 திருமதி. மேசி இம்மானுவேல்
176). யா/வெ/242 திரு. சந்தனம் செல்லையா
177). யா/வெ/244 திரு. நாராயணன் பழனிவேல்
178). யா/வெ/247 திரு. இராசமாணிக்கம் பத்மநாதன்
179). யா/வெ/249 திரு. மாரிமுத்து இராசேந்திரம்
180). யா/வெ/251 திரு. கந்தசாமி இராமசாமி
181). யா/வெ/259 திரு. நசரேன் யோகராசா
182). யா/வெ/265 திருமதி. செபமாலை இரத்தினம்
183). யா/வெ/268 திருமதி. குகானந்தன் ஜெயவாணி
184). யா/வெ/269 திருமதி. பொன்னம்மா சிங்காரவேல்
185). யா/வெ/274 திரு. துரைச்சாமி கருணையானந்தன்
186). யா/வெ/278 திரு. சந்தியா யேசுதாசன்
187). யா/வெ/295 திருமதி. லீலாவதி மகாதேவா
188). யா/வெ/298 திருமதி. இராஜமலர் குற்றாலலிங்கம்
189). யா/வெ/301 திரு. நடராசா ஈஸ்வரன்
190). யா/வெ/307 திருமதி. கலைமதி கயிலாயபிள்ளை
191). யா/வெ/308 திரு. பொன்னையா சண்முகரத்தினம்
192). யா/வெ/309 திருமதி. மணியம்மா நடராஜா
193). யா/வெ/312 திரு. யோன் நார்சீசியன் கிறிஸ்ரியன்
194). யா/வெ/316 திரு. நன்னி தர்மலிங்கம்
195). யா/வெ/317 திருமதி. பேபிசறோசா துரைராஜா
196). யா/வெ/318 திருமதி. லலிதா சிவகுமார்
197). யா/வெ/326 திருமதி. சாரதா நாகேஸ்வரன்
198). யா/வெ/327 திருமதி. மனோன்மணி திருச்செல்வம்
199). யா/வெ/337 திரு. காதர் அசாத்
200). யா/வெ/342 திரு. திருநாவுக்கரசு கனகரத்தினம்
201). யா/வெ/343 திரு. பேதுறுப்பிள்ளை மரியநாயகம்
202). யா/வெ/364 திரு. துரைசாமி சௌந்தரபாண்டியன்
203). யா/வெ/368 திருமதி. கைலாயநாயகி பரமநாதன்
204). யா/வெ/372 திருமதி. சுந்தரகாந்தி நடேசன்
205). யா/வெ/373 செல்வி. ஜானகி திருநாவுக்கரசு
206). யா/வெ/374 திருமதி. மரினா விக்ரறீன் யோகமணி இரட்ணசிங்கம்
207). யா/வெ/380 திரு. முத்தையா பாலகிருஸ்ணன்
208). யா/வெ/382 திருமதி. மேரியோசப்பின் சுப்பிரமணியம்
209). யா/வெ/385 திரு. கார்வாலோ அல்வின் சேவியர் றஞ்சிதன்
210). யா/வெ/388 செல்வன். தில்லைநடராஜன் அருணன்
211). யா/வெ/397 திருமதி. யசிந்திலி செல்வமேனன்
212). யா/வெ/399 திருமதி. பிரான்ஸிஸ் அம்மா பற்றிக்
213). யா/வெ/412 திரு. பொன்னம்பலம் ஆறுமுகம்
214). யா/வெ/418 திருமதி. யோசப்பின் நவாப்ராஜா
215). யா/வெ/423 திரு. அழகர்சாமி இராமசாமி
216). யா/வெ/424 திரு. அப்பாவு ஆச்சாரி கிருபானந்தம்
217). யா/வெ/426 திரு. பொன்னம்பலம் இராமநாதன்
218). யா/வெ/428 திருமதி. புஸ்பம் தம்பிராசா
219). யா/வெ/432 திருமதி. சறோஜா மூக்கையா
220). யா/வெ/434 திருமதி. கொலஸ்ரிக்கா இராஜகாரியர்
221). யா/வெ/435 திரு. பொன்னையா முத்தையா
222). யா/வெ/439 திருமதி. டெய்சி ஸ்ரனிஸ்லோஸ்
223). யா/வெ/449 திருமதி. அக்னஸ் விமலா சேவியர்
224). யா/வெ/457 திரு. அந்தோனிப்பிள்ளை பிறிற்றோ பாலேந்திரா
225). யா/வெ/461 திருமதி. மேரியசிந்தா அன்ரனிற்றா
226). யா/வெ/462 திரு. இரத்தினசிங்கம் சிவபாலசிங்கம்
227). யா/வெ/482 திரு. சுப்பிரமணியம் ஆறுமுகராஜா
228). யா/வெ/491 திருமதி. மரியராஜினி அலோசியஸ்
229). யா/வெ/514 திரு. கனகசுந்தரம் பூலோகராசா
230). யா/வெ/528 திரு. சபாபதி இராசரெத்தினம்
231). யா/வெ/530 திரு. நாராயணர் கிருஷ்ணபிள்ளை
232). யா/வெ/537 செல்வி. பத்மாசனி நவரட்ணம்
233). யா/வெ/539 திரு. பிராந்சி பிரான்ஸிஸ்
234). யா/வெ/559 திருமதி. சுலோஜனா பிரபாகரன்
235). யா/வெ/563 திருமதி. இன்பராணி ஜேசுதாஸ்
236). யா/வெ/564 திரு. கணபதிப்பிள்ளை இராஜரட்ணம்
237). யா/வெ/568 திரு. நாகலிங்கம் பரராசசிங்கம்
238). யா/வெ/576 திருமதி. புவனேஸ்வரி குணசேகரம்
239). யா/வெ/578 திரு. கந்தையா சிதம்பரப்பிள்ளை
240). யா/வெ/579 செல்வன். சிவசுப்பிரமணியம் மணிவண்ணன்
241). யா/வெ/583 திரு. ஜெயரத்தினம் சிறீகரன்
242). யா/வெ/590 திரு. தமபு கோவிந்தராசா
243). யா/வெ/609 திருமதி. லதா கணேசன்
244). யா/வெ/610 திருமதி. பவதாரினி செல்வராஜன்
245). யா/வெ/618 திரு. கபிரியன்பிள்ளை செலஸ்ரின் நிக்கலஸ்
246). யா/வெ/624 திருமதி. மேரியூக்கனிஸ்ரா இம்மானுவேல்
247). யா/வெ/625 திருமதி. புஸ்பலீலா மாணிக்கவாசகர்
248). யா/வெ/642 திருமதி. நாகேஸ்வரி மகேந்திரராசா
249). யா/வெ/644 திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
250). யா/வெ/646 திருமதி. கருணாதேவி புவனசுந்தரம்
251). யா/வெ/647 திருமதி. கற்பகமலர் இரத்தினசிங்கம்
252). யா/வெ/649 திருமதி. பிறேமிலா காமென் சிக்மாறிங்கம்
253). யா/வெ/656 திருமதி. பிரணீதா விஜியகுமார்
254). யா/வெ/657 திருமதி. இரதிதேவி புவனபூஷணம்
255). யா/வெ/658 திரு. சிவபாதசுந்தரம் சிவதாசன்
256). யா/வெ/660 திருமதி. பத்மாவதி பாலசிங்கம்
257). யா/வெ/663 திரு. நடராசா தங்கராசா
258). யா/வெ/667 திரு. முத்தையா அகஸ்ரின்
259). யா/வெ/668 திரு. கிறிஸ்தோபர் பீற்றர் லோறன்ஸ்பிள்ளை
260). யா/வெ/673 திருமதி. மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
261). யா/வெ/674 திரு. ஞானப்பிரகாசம் மெல்லின் ஜோன்றெஜினோல்ட்
262). யா/வெ/675 திரு. குருசுமுத்து வில்வராஜா
263). யா/வெ/688 திரு. பிரான்சிஸ் மகஸ்மியன்
264). யா/வெ/691 திரு. பிரான்ஸிஸ் மக்ஸ்மியன்
265). யா/வெ/692 திரு. பிரான்சிஸ் மக்ஸ்மியன்
266). யா/வெ/696 செல்வி. மேரிலூமினா ஞானமலர் ஞானப்பிரகாசம்
267). யா/வெ/698 திருமதி. சிவஞானலக்ஸ்மி நடராசா
268). யா/வெ/706 செல்வி. கிறிஸ்ரினா சுமதி ஞானப்பிரகாசம்
269). யா/வெ/711 திரு. சிவஞானம் பாவநாசம் சிவன்
270). யா/வெ/712 திரு. ஆசீர்வாதம் பிலிப் றொபினற்
271). யா/வெ/713 திரு. அந்தோனிப்பிள்ளை இம்மானு வேல் செல்வராஜா
272). யா/வெ/714 திருமதி. இவோன் கனிஸ்ரா வரதராஜா
273). யா/வெ/715 திரு. பொன்னம்பலம் இராமநாதன்
274). யா/வெ/716 திருமதி. பிரிஜேட் யூலியானா மனு வேற்பிள்ளை
275). யா/வெ/735 திரு. பிரான்சிஸ் மக்ஸ்மியன்
276). யா/வெ/754 திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு
277). யா/வெ/764 திரு. செல்லத்துரை பாலசுப்பிரமணியம்
278). யா/வெ/768 செல்வி. சிவயோகி நவரெட்ணம்
279). யா/வெ/778 திருமதி. ஜெயகுமாரி யோகராஜா
280). யா/வெ/786 திரு. பத்மநாதன் லக்ஸ்மன்
281). யா/வெ/787 திரு. நடராசா விஸ்வநாதன்
282). யா/வெ/788 செல்வி. வதனி இரத்தினசிங்கம்
283). யா/வெ/793 திரு. முத்தையா பரராசசிங்கம்
284). யா/வெ/797 செல்வி. ஈற்றாசாளினி வில்லியம்
285). யா/வெ/813 திரு. இராமசாமிஜயர் கிருஷ்ணகு மாரசர்மா
286). யா/வெ/829 திருமதி. பாலரதி அருளானந்தர்
287). யா/வெ/835 திரு. கனகசுந்தரம் மகேஸ்வரன்
288). யா/வெ/838 செல்வி. லோசனா தாமோதரம்பிள்ளை
289). யா/வெ/848 திரு. நாகேந்திரம் பேரின்பநாயகம்
290). யா/வெ/850 திருமதி. பத்மராணி ஆனந்தி அரியநாயகம்
291). யா/வெ/851 திருமதி. பேணுடேற் அருள்தாசன்
292). யா/வெ/858 திருமதி. ரஞ்சி திருஞானசம்பந்தர்
293). யா/வெ/877 செல்வன். கனகசபை துஷ்யந்தன்
294). யா/வெ/879 திரு. ஐயாத்துரை கனகரத்தினம்
295). யா/வெ/882 செல்வி. பெலிசியா வினோதினி நவரத்தினம்
296). யா/வெ/894 திருமதி. கமலாம்பிகை தர்மலிங்கம்
297). யா/வெ/915 திரு. அந்தோனிப்பிள்ளை யோசப் அலோசியஸ் செல்வநாயகம்
298). யா/வெ/916 திரு. கைலாசப்பிள்ளை கந்தசாமி
299). யா/வெ/923 செல்வி. ஷெரின் ஜெனிபா மனுவேற்பிள்ளை
300). யா/வெ/926 திரு. சுப்பையா துரைராஜா
301). யா/வெ/948 திருமதி. மனோன்மணி அருணாசலம்
302). யா/வெ/958 திருமதி. கனகம்மா இராமநாதன்
303). யா/வெ/964 திருமதி. விஜேந்திரராணி சண்முகசாமி
304). யா/வெ/971 திருமதி. கோகிலலட்சுமி பேரின்பநாயகம்
305). யா/வெ/977 திருமதி. கிளரன்சியா அன்ரனி
306). யா/வெ/979 திரு. அன்ரனி டியோரோனிஸ் றொசாறியோ கோமஸ்
307). யா/வெ/982 திருமதி. சிவசோதி பரமேஸ்வரன்
308). யா/வெ/992 திரு. இராஜப்பு யோசப்
309). யா/வெ/998 திரு. கந்தையா புவனரெத்தினம்
310). யா/வெ/1000 திருமதி. சறோஜா பிறைசூடி
311). யா/வெ/1001 திரு. யூட் விஜேந்திரன் தைரியர்
312). யா/வெ/1019 திரு. சபாரெட்ணம் பாலசுப்பிரமணியம்
313). யா/வெ/1027 திரு. விஸ்வலிங்கம் குகாதரன்
314). யா/வெ/1029 திரு. கணபதிப்பிள்ளை விஜயரட்ணம்
315). யா/வெ/1062 திரு. சேவியர் அன்ரனிப்பிள்ளை
316). யா/வெ/1066 திரு. யோசப் அல்பிறெட் நல்லநாதன் பேடினற்
317). யா/வெ/1067 செல்வி. கிறிஸ்ரினா ரஞ்சினி ராஜசேகரம்
318). யா/வெ/1078 திரு. கனகரத்தினம் யோகரட்ணம்
319). யா/வெ/1087 திரு. யோசேவ் பற்றிக் செல்வநாயகம்
320). யா/வெ/1090 செல்வன். இராமசாமி கந்தராஜா
321). யா/வெ/1100 திருமதி. கோமதி ரூபலிங்கம்
322). யா/வெ/1104 திரு. பொன்னுத்துரை செல்வராஜா
323). யா/வெ/1106 திருமதி. கமலாம்பாள் பத்மநாதன்
324). யா/வெ/1120 செல்வி. கலாராணி சுப்பிரமணியம்
325). யா/வெ/1135 திருமதி. இந்திரா ஜெயந்தி ரவீந்திரன்
326). யா/வெ/1138 திருமதி. லலிதா லோகேஸ்வரன்
327). யா/வெ/1139 திருமதி. சறோஜினிதேவி கிருஸ்ணதாஸ்
328). யா/வெ/1157 திருமதி. விஜயந்தி பஞ்சாட்சரம்
329). யா/வெ/1160 திருமதி. பரமேஸ்வரி நல்லதம்பி
330). யா/வெ/1162 திரு. நாகரத்தினம் செல்வரத்தினம்
331). யா/வெ/1164 செல்வி. லொறின்டா சுபோதினி சிறீரங்கநாதன்
332). யா/வெ/1187 திருமதி. பத்மராணி நாகேந்திரன்
333). யா/வெ/1189 திருமதி. பிரியாழினி இராகுலன்

221). யா/வெ/435 திரு. பொன்னையா முத்தையா
222). யா/வெ/439 திருமதி. டெய்சி ஸ்ரனிஸ்லோஸ்
223). யா/வெ/449 திருமதி. அக்னஸ் விமலா சேவியர்
224). யா/வெ/457 திரு. அந்தோனிப்பிள்ளை பிறிற்றோ பாலேந்திரா
225). யா/வெ/461 திருமதி. மேரியசிந்தா அன்ரனிற்றா
226). யா/வெ/462 திரு. இரத்தினசிங்கம் சிவபாலசிங்கம்
227). யா/வெ/482 திரு. சுப்பிரமணியம் ஆறுமுகராஜா
228). யா/வெ/491 திருமதி. மரியராஜினி அலோசியஸ்
229). யா/வெ/514 திரு. கனகசுந்தரம் பூலோகராசா
230). யா/வெ/528 திரு. சபாபதி இராசரெத்தினம்
231). யா/வெ/530 திரு. நாராயணர் கிருஷ்ணபிள்ளை
232). யா/வெ/537 செல்வி. பத்மாசனி நவரட்ணம்
233). யா/வெ/539 திரு. பிராந்சி பிரான்ஸிஸ்
234). யா/வெ/559 திருமதி. சுலோஜனா பிரபாகரன்
235). யா/வெ/563 திருமதி. இன்பராணி ஜேசுதாஸ்
236). யா/வெ/564 திரு. கணபதிப்பிள்ளை இராஜரட்ணம்
237). யா/வெ/568 திரு. நாகலிங்கம் பரராசசிங்கம்
238). யா/வெ/576 திருமதி. புவனேஸ்வரி குணசேகரம்
239). யா/வெ/578 திரு. கந்தையா சிதம்பரப்பிள்ளை
240). யா/வெ/579 செல்வன். சிவசுப்பிரமணியம் மணிவண்ணன்
241). யா/வெ/583 திரு. ஜெயரத்தினம் சிறீகரன்
242). யா/வெ/590 திரு. தமபு கோவிந்தராசா
243). யா/வெ/609 திருமதி. லதா கணேசன்
244). யா/வெ/610 திருமதி. பவதாரினி செல்வராஜன்
245). யா/வெ/618 திரு. கபிரியன்பிள்ளை செலஸ்ரின் நிக்கலஸ்
246). யா/வெ/624 திருமதி. மேரியூக்கனிஸ்ரா இம்மானுவேல்
247). யா/வெ/625 திருமதி. புஸ்பலீலா மாணிக்கவாசகர்
248). யா/வெ/642 திருமதி. நாகேஸ்வரி மகேந்திரராசா
249). யா/வெ/644 திரு. சின்னத்தம்பி வீரசிங்கம்
250). யா/வெ/646 திருமதி. கருணாதேவி புவனசுந்தரம்
251). யா/வெ/647 திருமதி. கற்பகமலர் இரத்தினசிங்கம்
252). யா/வெ/649 திருமதி. பிறேமிலா காமென் சிக்மாறிங்கம்
253). யா/வெ/656 திருமதி. பிரணீதா விஜியகுமார்
254). யா/வெ/657 திருமதி. இரதிதேவி புவனபூஷணம்

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

255).யா/வெ/658 திரு. சிவபாதசுந்தரம் சிவதாசன்
256).யா/வெ/660 திருமதி. பத்மாவதி பாலசிங்கம்
257).யா/வெ/663 திரு. நடராசா தங்கராசா
258).யா/வெ/667 திரு. முத்தையா அகஸ்ரின்
259).யா/வெ/668 திரு. கிறிஸ்தோபர் பீற்றர் லோறன்ஸ்பிள்ளை
260).யா/வெ/673 திருமதி. மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
261).யா/வெ/674 திரு. ஞானப்பிரகாசம் மெல்லின் ஜோன் றெஜினோல்ட்
262).யா/வெ/675 திரு. குருசுமுத்து வில்வராஜா
263).யா/வெ/688 திரு. பிரான்சிஸ் மகஸ்மியன்
264).யா/வெ/691 திரு. பிரான்ஸிஸ் மக்ஸ்மியன்
265).யா/வெ/692 திரு. பிரான்சிஸ் மக்ஸ்மியன்
266).யா/வெ/696 செல்வி. மேரிலூமினா ஞானமலர் ஞானப்பிரகாசம்
267).யா/வெ/698 திருமதி. சிவஞானலக்ஸ்மி நடராசா
268).யா/வெ/706 செல்வி. கிறிஸ்ரினா சுமதி ஞானப்பிரகாசம்
269).யா/வெ/711 திரு. சிவஞானம் பாவநாசம் சிவன்
270).யா/வெ/712 திரு. ஆசீர்வாதம் பிலிப் றொபினற்
271).யா/வெ/713 திரு. அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் செல்வராஜா
272).யா/வெ/714 திருமதி. இவோன் கனிஸ்ரா வரதராஜா
273).யா/வெ/715 திரு. பொன்னம்பலம் இராமநாதன்
274).யா/வெ/716 திருமதி. பிரிஜேட் யூலியானா மனுவேற்பிள்ளை
275).யா/வெ/735 திரு. பிரான்சிஸ் மக்ஸ்மியன்
276).யா/வெ/754 திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு
277).யா/வெ/764 திரு. செல்லத்துரை பாலசுப்பிரமணியம்
278).யா/வெ/768 செல்வி. சிவயோகி நவரெட்ணம்
279).யா/வெ/778 திருமதி. ஜெயகுமாரி யோகராஜா
280).யா/வெ/786 திரு. பத்மநாதன் லக்ஸ்மன்
281).யா/வெ/787 திரு. நடராசா விஸ்வநாதன்
282).யா/வெ/788 செல்வி. வதனி இரத்தினசிங்கம்
283).யா/வெ/793 திரு. முத்தையா பரராசசிங்கம்
284).யா/வெ/797 செல்வி. ஈற்றாசாளினி வில்லியம்
285).யா/வெ/813 திரு. இராமசாமிஐயர் கிருஷ்ண குமாரசர்மா
286).யா/வெ/829 திருமதி. பாலரதி அருளானந்தர்
287).யா/வெ/835 திரு. கனகசுந்தரம் மகேஸ்வரன்
288).யா/வெ/838 செல்வி. லோசனா தாமோதரம்பிள்ளை
289).யா/வெ/848 திரு. நாகேந்திரம் பேரின்பநாயகம்
290).யா/வெ/850 திருமதி. பத்மராணி ஆனந்தி அரியநாயகம்
291).யா/வெ/851 திருமதி. பேணுடேற் அருள்தாசன்
292).யா/வெ/858 திருமதி. ரஞ்சி திருஞானசம்பந்தர்
293).யா/வெ/877 செல்வன். கனகசபை துஷ்யந்தன்
294).யா/வெ/879 திரு. ஐயாத்துரை கனகரத்தினம்
295).யா/வெ/882 செல்வி. பெலிசியா வினோதினி நவரத்தினம்
296).யா/வெ/894 திருமதி. கமலாம்பிகை தர்மலிங்கம்
297).யா/வெ/915 திரு. அந்தோனிப்பிள்ளை யோசப் அலோசியஸ் செல்வநாயகம்
298).யா/வெ/916 திரு. கைலாசப்பிள்ளை கந்தசாமி
299).யா/வெ/923 செல்வி. ஷெரின் ஜெனிபாமனு வேற்பிள்ளை
300).யா/வெ/926 திரு. சுப்பையா துரைராஜா
301).யா/வெ/948 திருமதி. மனோன்மணி அருணாசலம்
302).யா/வெ/958 திருமதி. கனகம்மா இராமநாதன்
303).யா/வெ/964 திருமதி. விஜேந்திரராணி சண்முகசாமி
304).யா/வெ/971 திருமதி. கோகிலலட்சுமி பேரின்பநாயகம்
305).யா/வெ/977 திருமதி. கிளரன்சியா அன்ரனி
306).யா/வெ/979 திரு. அன்ரனி டியோரோனிஸ் றொசாறியோ கோமஸ்
307).யா/வெ/982 திருமதி. சிவசோதி பரமேஸ்வரன்
308).யா/வெ/992 திரு. இராஜப்பு யோசப்
309).யா/வெ/998 திரு. கந்தையா புவனரெத்தினம்
310).யா/வெ/1000 திருமதி. சறோஜா பிறைசூடி
311).யா/வெ/1001 திரு. யூட் விஜேந்திரன் தைரியர்
312).யா/வெ/1019 திரு. சபாரெட்ணம் பாலசுப்பிரமணியம்
313).யா/வெ/1027 திரு. விஸ்வலிங்கம் குகாதரன்
314).யா/வெ/1029 திரு. கணபதிப்பிள்ளை விஜயரட்ணம்
315).யா/வெ/1062 திரு. சேவியர் அன்ரனிப்பிள்ளை
316).யா/வெ/1066 திரு. யோசப் அல்பிறெட் நல்லநாதன் பேடினற்
317).யா/வெ/1067 செல்வி. கிறிஸ்ரினா ரஞ்சினி ராஜசேகரம்
318).யா/வெ/1078 திரு. கனகரத்தினம் யோகரட்ணம்
319).யா/வெ/1087 திரு. யோசேவ் பற்றிக் செல்வநாயகம்
320).யா/வெ/1090 செல்வன். இராமசாமி கந்தராஜா
321).யா/வெ/1100 திருமதி. கோமதி ரூபலிங்கம்
322).யா/வெ/1104 திரு. பொன்னுத்துரை செல்வராஜா
323).யா/வெ/1106 திருமதி. கமலாம்பாள் பத்மநாதன்
324).யா/வெ/1120 செல்வி. கலாராணி சுப்பிரமணியம்
325).யா/வெ/1135 திருமதி. இந்திரா ஜெயந்தி ரவீந்திரன்
326).யா/வெ/1138 திருமதி. லலிதா லோகேஸ்வரன்
327).யா/வெ/1139 திருமதி. சறோஜினிதேவி கிருஸ்ணதாஸ்
328).யா/வெ/1157 திருமதி. விஜயந்தி பஞ்சாட்சரம்
329).யா/வெ/1160 திருமதி. பரமேஸ்வரி நல்லதம்பி
330).யா/வெ/1162 திரு. நாகரத்தினம் செல்வரத்தினம்
331).யா/வெ/1164 செல்வி. லொறின்டா சுபோதினி சிறீரங்கநாதன்
332).யா/வெ/1187 திருமதி. பத்மராணி நாகேந் திரன்
333).யா/வெ/1189 திருமதி. பிரியாழினி இராகுலன்
334).யா/வெ/1192 திருமதி. ஞானம்மா அந்தோனிப்பிள்ளை
335).யா/வெ/1193 திருமதி. சிரோன்மணி சோமசுந்தரம்
336).யா/வெ/1197 திரு. சூசைப்பிள்ளை மரியதாஸ்
337).யா/வெ/1202 திருமதி. பத்மினி கணேசலிங்கம்
338).யா/வெ/1211 திருமதி. ரங்கநாயகி பூலோகநாதன்
339).யா/வெ/1212 திருமதி. டொறின் யோசேப்
340).யா/வெ/1213 செல்வி. சுனித்தா கந்தசாமி
341).யா/வெ/1215 திருமதி. அலெக்சான்ரா நவமலர் இம்மானுவேல்
342).யா/வெ/1219 திரு. கந்தையா இராசரத்தினம்
343).யா/வெ/1220 திரு. இராசரத்தினம் லோகேஸ்வரன்
344).யா/வெ/1227 திரு. சின்னையா சரவணமுத்து
345).யா/வெ/1231 திருமதி. அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளை
346).யா/வெ/1248 திருமதி. பரமேஸ்வரி பாலேந்திரன்
347).யா/வெ/1249 திருமதி. விக்கினேஸ்வரி தயாபரன்
348).யா/வெ/1254 திருமதி. மனோகரி திலகரட்ணம்
349).யா/வெ/1271 திரு. தியாகராசா ராஜ்குமார்
350).யா/வெ/1294 திருமதி. புவனேஸவரி சிவராசா
351).யா/வெ/1323 திரு. ஆறுமுகம் மோகனதாஸ்
352).யா/வெ/1324 திரு. பாலசுப்பிரமணியம் கெங்காதரன்
353).யா/வெ/1329 திரு. சபாபதி சின்னத்துரை
354).யா/வெ/1331 திரு. கார்த்திகேசு தனபாலசிங்கம்
355).யா/வெ/1334 திருமதி. யோகேஸ்வரி வேலாயுதம்
356).யா/வெ/1338 திரு. நீக்கிலாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை
357).யா/வெ/1343 திரு. எட்வேட் பரமானந்தம் ராஜா
358).யா/வெ/1347 திரு. யோசப் பற்றிக் ஆனந்தகுமார்
359).யா/வெ/1351 செல்வி. மறினாசெறின் மனுவல்பிள்ளை
360).யா/வெ/1361 திரு. ஏட்லிசுரேஸ் குறோம் நிக்லஸ்
361).யா/வெ/1362 திருமதி. சரஸ்வதி கனகரத்தினம்
362).யா/வெ/1367 செல்வி. துஷ்யந்தி பாலசிங்கம்
363).யா/வெ/1374 திரு. துரைச்சாமி சச்சிதானந்தன்
364).யா/வெ/1377 திரு. மருசலின்பிள்ளை மரியதாசன்
365).யா/வெ/1390 திரு. செல்லத்துரை பத்மநாதன்
366).யா/வெ/1399 திரு. முருகேசு திருநீலகண்டசிவம்
367).யா/வெ/1412 திரு. கதிரவேலு சிற்றம்பலம்
368).யா/வெ/1414 செல்வி. சாந்தினி கணேஸ்
369).யா/வெ/1430 செல்வன். கந்தையா சண்முகரட்ணம்
370).யா/வெ/1440 திருமதி. ஜஸ்மின் அனக்கிலேற்றஸ்
371).யா/வெ/1464 திரு. நடராசா ஜீவரட்ணராஜா
372).யா/வெ/1465 திரு. மரியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை
373).யா/வெ/1468 திருமதி. யூட்ஸ்மடோனா பாஸ்கரன்
374).யா/வெ/1469 திரு. இம்மானுவேல் அன்ரன்விமலதாஸ்
375).யா/வெ/1475 திரு. தம்பையா இராசரத்தினம்
376).யா/வெ/1479 திரு. அந்தோனிப்பிள்ளை சைமன்
377).யா/வெ/1488 திரு. சண்முகலிங்கம் திசோகரன்
378).யா/வெ/1500 திருமதி. உலகேஸ்வரி சிவசக்திவேல்
379).யா/வெ/1518 திருமதி. நித்தியலெட்சுமி சீவரெத்தினம்
380).யா/வெ/1520 திரு. கந்தையா சண்முகரட்ணம்
381).யா/வெ/1521 திரு. அந்தோனிப்பிள்ளை மைக்கல்
382).யா/வெ/1525 திருமதி. பவானியம்மா சண்முகநாதன்
383).யா/வெ/1530 செல்வன். வெல்வரட்ணம் சுபைதரன்
384).யா/வெ/1532 திரு. அருளானந்தம் அனரன்விஜியரத்தினம்
385).யா/வெ/1534 திரு. இம்மனுவேல் அன்ரன்
386).யா/வெ/1535 திரு. சுப்பிரமணியம் இராஜேந்திரபிரசாந்
387).யா/வெ/1536 திருமதி. ஜெயமலர் லிங்கராசா
388).யா/வெ/1538 திருமதி. ரஞ்சிதவதனா சீவராஜா
389).யா/வெ/1539 திருமதி. கமலாம்பிகை சபாரட்ணம்
390).யா/வெ/1542 திருமதி. ஜெராட் மாசிலா பிலேந்திரன்
391).யா/வெ/1546 திரு. அந்தோனிப்பிள்ளை றிச்சாட் பீரிஸ
392).யா/வெ/1548 திரு. சம்பந்தர் பாலேந்திரன்
393).யா/வெ/1553 திரு. பரராஜசிங்கம் உதயகுமார்
394).யா/வெ/1554 திருமதி. மாகிரேட் யுவக்கீம்பிள்ளை
395).யா/வெ/1555 திருமதி. அம்பிகாபதி சிவலிங்கம்
396).யா/வெ/1562 திருமதி. பிலோமினா தேவதாஸ்
397).யா/வெ/1564 திருமதி. செபமாலை மத்தியூஸ்
398).யா/வெ/1565 திருமதி. கோமதியம்மா அப்புத்துரை
399).யா/வெ/1577 திருமதி. பரமேஸ்வரி இராசநாயகம்
400).யா/வெ/1578 திருமதி. அன்னலட்சுமி பற்குணசிங்கம்
401).யா/வெ/1580 செல்வி. ராகினி சண்முகராஜா
402).யா/வெ/1584 திரு. இராமலிங்கம் வேலுப்பிள்ளை
403).யா/வெ/1585 செல்வி. புவனலெட்சுமி சினனத்தம்பி
404).யா/வெ/1587 திருமதி. மரியைப்பிள்ளை லோறன்ஸ்
405).யா/வெ/1588 திரு. கோபாலச்செட்டியார் கிருஸ்ணசாமி
406).யா/வெ/1592 திரு. சரவணமுத்து கிங்ஸ்லி சுந்தரலிங்கம்
407).யா/வெ/1593 திரு. மோசஸ் ஜெயராசா
408).யா/வெ/1594 திரு. முத்துக்குமாரு புவனேஸ்வரநாதன்
409).யா/வெ/1596 திருமதி. புவனேஸ்வரி யோகலிங்கம்
410).யா/வெ/1602 திரு. கந்தையா இராசரத்தினம்
411).யா/வெ/1603 திரு. கலாநிதி சுந்தரலிங்கம்
412).யா/வெ/1604 திரு. அருணாசலம் முத்துலிங்கம்
413).யா/வெ/1605 திரு. ஜக்கரசு தொம்மைக்குட்டி
414).யா/வெ/1608 திரு. வீரசிங்கம் ஜோன் இராசசிங்கம்
415).யா/வெ/1611 திருமதி. மேரிபிலோமினா தவமணி பாஸ்கரன்
416).யா/வெ/1614 திரு. பிலிப்பிள்ளை மரியராஜா
417).யா/வெ/1616 திரு. நமசிவாயம் ஐயாத்துரை
418).யா/வெ/1617 திரு. ஜேசுவடிவேலன் செல்வராஜ்
419).யா/வெ/1618 திரு. பற்குணராஜா முருகதாஸ்
420).யா/வெ/1622 திரு. அமிர்தகுமாரி சண்முகலிங்கம்
421).யா/வெ/1628 திரு. இம்மானுவேல் மரியநாதன்
422).யா/வெ/1629 திரு. குருசு இன்பநாதன்
423).யா/வெ/1631 திரு. சிவகுருநாதன் சுப்பிரமணியம்
424).யா/வெ/1639 திருமதி. சிவரத்தினகௌரி பிரிதிராஜ்
425).யா/வெ/1641 திரு. அம்பலவாணர் சுந்தரலிங்கம்
426).யா/வெ/1644 திருமதி. தயாநிதி தேவராஜா
427).யா/வெ/1648 திருமதி. குணமணி ஐயாத்துரை
428).யா/வெ/1650 திரு. தம்பையா இராசேந்திரம்
429).யா/வெ/1663 திரு. தொம்மன் மரியதாஸ்
430).யா/வெ/1671 திருமதி. மரியம்மா ஆசீர்வாதம்
431).யா/வெ/1673 திருமதி. ஜெம்றூட்ஸ் சில்லிர்ஸ் எட்வின் இராஜகோன்
432).யா/வெ/1675 திரு. கதிரவேலு அர்சுனன்
433).யா/வெ/1679 திரு. அம்பலவாணர் சிவஞானம்
434).யா/வெ/1683 திரு. மரியாம்பிள்ளை நீக்கிலஸ்
435).யா/வெ/1686 திருமதி. மகேஸ்வரி செல்வராசா
436).யா/வெ/1687 திருமதி. பவானியம்மா தெய்வேந்திரம்
437).யா/வெ/1690 திருமதி. செல்வநாயகி பாலச்சந்திரன்
438).யா/வெ/1691 திருமதி. சந்திராணி குணரத்தினம்
439).யா/வெ/1692 செல்வி. நளாயினி சண்முகலிங்கம்
440).யா/வெ/1694 திருமதி. சந்திரகலா அமலதாஸ்
441).யா/வெ/1698 திரு. செல்வநாயகம் றொயஸ்டேமியன்
442).யா/வெ/1699 செல்வி. லூக்கிறேசியா் குருசுமுத்து

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

001).யா/கோ/2 திருமதி. அசோகமலர் அருந்தவநாதன்
002).யா/கோ/62 திரு. கந்தையா வன்னியசிங்கம்
003).யா/கோ/120 திருமதி. இரத்தினம் சின்னப்பா
004).யா/கோ/157 திரு. ஐயாத்துரை துரைராசா
005).யா/கோ/192 திரு. செல்லத்துரை கனகசேகரமூர்த்தி
006).யா/கோ/332 திரு. கதிரித்தம்பி அம்பலவாணர்
007).யா/கோ/355 திரு. சடையர் இளையதம்பி
008).யா/கோ/389 திரு. சுப்பிரமணியம் கதிராசிப்பிள்ளை
009).யா/கோ/443 திருமதி செல்வபாக்கியம் செல்வநாயகம்
010).யா/கோ/532 திரு. ஜெயரட்ணம் ஜெயதேவன்
011).யா/கோ/535 திரு. கனகலிங்கம் கணேசராசா
012).யா/கோ/565 திரு. தம்பையா இராசரத்தினம்
013).யா/கோ/569 திரு. நன்னியர் இரத்தினம்
014).யா/கோ/640 திரு. செல்லர் கந்தையா
015).யா/கோ/694 திரு. சுப்பர் நடராசா
016).யா/கோ/706 திருமதி. புஸ்பவதி தாமோதரம்பிள்ளை
017).யா/கோ/707 செல்வி. பரமபதி தம்பித்துரை
018).யா/கோ/740 திரு. ஆசை இராசையா
019).யா/கோ/883 செல்வி. ஜெயரஞ்சினி கிருஸ்ணன்
020).யா/கோ/1042 திருமதி. செல்வநாயகி துரைசிங்கம்
021).யா/கோ/1177 திரு. வைத்திலிங்கம் குணசேகரம்
022).யா/கோ/1180 திரு. கணபதிப்பிள்ளை கார்த்திகேசு
023).யா/கோ/1249 திருமதி. பூரணம் பொன்னையா
024).யா/கோ/1294 திரு. சங்கரப்பிள்ளை இரத்தினம்
025).யா/கோ/1303 திரு. இராமலிங்கம் இரத்தினசிங்கம்
026).யா/கோ/1307 திரு. மயில்வாகனம் இராசரத்தினம்
027).யா/கோ/1405 திரு. தம்பையா செல்வரத்தினம்
028).யா/கோ/1587 திரு. சிவக்கொழுந்து சோதிலிங்கம்
029).யா/கோ/1651 திருமதி. இராசமணி வயிரமுத்து
030).யா/கோ/1788 திரு. செல்லத்துர்ரை அருள்ராஜசிங்கம்
031).யா/கோ/1834 திரு. வெற்றிவேலு முத்துக்குமார்
032).யா/கோ/1899 திருமதி. சின்னத்தங்கச்சி இராசேந்திரம்
033).யா/கோ/1927 திரு. முத்தர் சுப்பிரமணியம்
034).யா/கோ/1955 திரு. முத்துத்தமபி தங்கராஜா
035).யா/கோ/1967 திரு. பொன்னையா அரியநாயகம்
036).யா/கோ/2000 திருமதி. ஜஸ்மின் பாலகிருஸ்ணராஜா
037).யா/கோ/2016 திருமதி. கமலவேணி கணேசன்
038).யா/கோ/2087 திரு. இராமசாமி பெருமாள்
039).யா/கோ/2220 திரு. கணபதிப்பிள்ளை உதயகுமாரன்
040).யா/கோ/2401 திரு. கந்தையா குமாரசாமி
041).யா/கோ/2433 திரு. கந்தர் சின்னத்தம்பி
042).யா/கோ/2464 திரு. சதாசிவம் கிருஷ்ணதாசன்
043).யா/கோ/2560 திரு. நாகலிங்கம் நவரத்தினம்
044).யா/கோ/2617 திருமதி. கண்மணி சண்முகம்
045).யா/கோ/2633 திருமதி. கண்மணி செல்லத்துரை
046).யா/கோ/2648 திரு. சின்னத்தம்பி மகேஸ்வரதாசன்
047).யா/கோ/2653 திரு. சிந்தாமணி முத்தையா
048).யா/கோ/2716 திருமதி. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
049).யா/கோ/2731 திருமதி. இராஜமுத்து கதிரவேலு
050).யா/கோ/2790 திரு. கனகசபாபதி சிவசுப்பிரமணியம்
051).யா/கோ/2824 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
052).யா/கோ/2831 திரு. மாதர் தம்பிராசா
053).யா/கோ/2833 திரு. வைத்திலிங்கம் தம்பிரத்தினம்
054).யா/கோ/2845 செல்வி. நாகநந்தினி திருநாவுக்கரசு
055).யா/கோ/2857 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
056).யா/கோ/2933 செல்வி. நிர்மலாதேவி தம்பிராசா
057).யா/கோ/2968 திரு. சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா
058).யா/கோ/3086 திரு. பொன்னம்பலம் கணேசலிங்கம்
059).யா/கோ/3097 திரு. தம்பையா கணபதிப்பிள்ளை
060).யா/கோ/3125 திரு. இறப்பியேற்பிள்ளை மனுவேற்பிள்ளை
061).யா/கோ/3175 திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை
062).யா/கோ/3218 திருமதி. சவுந்தலாதேவி இராசையா
063).யா/கோ/3352 திரு. சின்னத்துரை கனகராசா
064).யா/கோ/3377 திரு. சின்னத்தம்பி பஞ்சலிங்கம்
065).யா/கோ/3434 திரு. வைத்தீஸ்வரக்குருக்கள் சபாரத்தினக்குருக்கள்
066).யா/கோ/3461 திரு. கார்த்தி தங்கராசா சிவானந்தராசா
067).யா/கோ/3588 திருமதி. நவரஞ்சிதமலர் இராமச்சந்திரன்
068).யா/கோ/3618 திருமதி. புஸ்பராணி விஸ்வலிங்கம்
069).யா/கோ/3669 திருமதி. செந்தமிழ்ச்செல்வி செந்தில்நாதன்
070).யா/கோ/3696 திரு. துரைஐயா தயாபரன்
071).யா/கோ/3709 திரு. இராமையா வடிவேல்
072).யா/கோ/3830 திருமதி. மேரிறேசலின் சூசைப்பிள்ளை
073).யா/கோ/3864 திரு. வீரசிங்கம் பத்மசீலன்
074).யா/கோ/4011 திரு. ஐயாத்துரை யோகலிங்கம்
075).யா/கோ/4313 திரு. சின்னப்பு சத்தியமூர்த்தி
076).யா/கோ/4315 திருமதி. சிவகாமியம்மா இராமச்சந்திரன்
077).யா/கோ/4320 திருமதி. சரஸ்வதி சரவணமுத்து
078).யா/கோ/4365 திரு. நாகமுத்து அப்பாத்துரை
079).யா/கோ/4369 திருமதி. அனுலாதேவி தவராசா
080).யா/கோ/4394 திரு. மயில்வாகனம் மகேந்திரன்
081).யா/கோ/4419 திருமதி. கனகேஸ்வரி இராசரத்தினம்
082).யா/கோ/4642 திரு. நமசிவாயம் வன்னியசிங்கம்
083).யா/கோ/4874 திருமதி. விஜயலட்சுமி நாகலிங்கம்
084).யா/கோ/4875 திரு. வைத்தி வல்லிபுரம்
085).யா/கோ/4937 திரு. சிவம் இராஜராசேஸ்வரன்
086).யா/கோ/4943 திரு. செல்லத்துரை துதிபாலசுந்தரன்
087).யா/கோ/4960 திருமதி. மகேஸ்வரி இராசகிருஸ்ணன்
088).யா/கோ/4968 திரு. பொன்னையா வைத்திலிங்கம்
089).யா/கோ/5064 திரு. தியாகராசா பன்னீர்ச்செல்வம்
090).யா/கோ/5293 திருமதி. யோகேஸ்வரி ஸ்ரீரங்கநாதன்
091).யா/கோ/5409 திரு. இராமசாமி சித்தானந்தன
092).யா/கோ/5478 திருமதி. அமிர்தம் பொன்னுத்துரை
093).யா/கோ/5548 திரு. சபாபதி பூலோகநாதன்
094).யா/கோ/5584 திரு. சின்னத்தம்பி சிவப்பிரகாசம்
095).யா/கோ/5605 திருமதி. சிவபாக்கியம் கனகசபாபதி
096).யா/கோ/5679 திருமதி. முத்தம்மா இராசநாயகம்
097).யா/கோ/5789 திருமதி. நிரோஜினி கிருஸ்ணராசா
098).யா/கோ/5792 திருமதி. நளினி மனோகரன்
099).யா/கோ/5798 திரு. இராசையா நித்தியானந்தன்
100).யா/கோ/5805 திரு. க.பரமநாதர் பத்மநாதன்
101).யா/கோ/5814 திரு. இராசையா பஞ்சலிங்கம்
102).யா/கோ/5821 திருமதி. ரஜனி பரமலிங்கம்
103).யா/கோ/5839 திருமதி. செல்வராணி துரைராசா
104).யா/கோ/5892 திருமதி. யோகாம்பிகை அற்புதநாதன்

நாளை தொடரும்...

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாம் ஒன்று நினைக்க - தெய்வம்
மற்றொன்றை நினைக்கும்.
- தமிழ் முதுமொழி.

## நமது நோக்கு

### தெற்கின் குழப்பவாதிகளுக்கு தமிழுலகத்தின் நன்றிகள்!

விடுதலைப் புலிகளின் நிர்வாக அமைப்புக்கள், நிறுவனங்கள் பற்றியதாகவே தற்போது தென்னிலங்கை சூடுபிடித்துக் காணப்படுகின்றது.

சில வாரங்களுக்கு முன்பாக - விடுதலைப் புலிகளின் காவல்துறை, நீதிமன்றங்கள் பற்றிய சர்ச்சையை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதலாக ஜே.வி.பி.யின் கிராமமட்டச் செயலாளர்வரை கடுமையாகக் கிளப்பியுள்ளனர்.

வட-கிழக்கில், தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சமூக ஒழுங்கமைப்பையும், சட்டம் - ஒழுங்குக் காப்பையும் ஏற்படுத்தவென விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட நீதி மற்றும் சட்டக்காப்பு அமைப்புக்கள் பற்றிய - உண்மைக்கு மாறான பிரசாரங்கள் பல வழிகளிலுமாக முடுக்கிவிடப்பட்டன.

ஆனால், நடந்தது என்ன? இவை - இந்தக் குழப்பவாத சக்திகள் எதிர்பார்த்ததுபோல் - பெரிதாக எந்தவித சலசலப்பையும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடவில்லை.

மாறாக - விடுதலைப் புலிகளின் நீதி, சட்டக்காப்பு அமைப்புக்கள் பற்றிய ஆழ்ந்த கவனிப்பும், பாராட்டுக்களுமே கிடைக்கப்பெற்றுள்ளன.

அண்மையில் தமிழ்ப்பகுதிகளுக்கு வந்து சென்ற சர்வதேச மனித உரிமை அமைப்புப் பிரதிநிதிகள் - விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாக முறைகள் மற்றும் நீதிவழங்கு முறை உயர்தரத்தில் இருப்பதா கப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாக முறைமையை, இலங்கையின் நீதி அமைப்புக்களின் செயற்பாடுகளுடன் ஒப்பீட்டாராயும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது பற்றிக் கூறிய ஜூரிகள் தேசிய ஆணைக்குழுவின் துணைத்தலைவரும், சர்வதேச ஜூரிகள் சங்க சங்க உபதலைவருமான டெஸ்மன் பெரேரா - இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழு திறமையாக இயங்கவில்லை. அதன்மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை. இந்த நிலையில் - புலிகளின் நீதிமன்றங்கள் இன்றைய நிலையில் பிரச்சினைக்குரிய விடயமல்ல என்று தெரிவித்தார்.

இந்த வகையில், தென்னிலைங்கைக் குழப்பவாதிகள் கிளப்பிய சர்ச்சை, விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாக அமைப்புக்களுக்கு பாராட்டையும் பிரபல்யத்தையும் பெற்றுக்கொடுப்பதாகவே அமைந்துவிட்டது.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் வானொலி பற்றிய விவகாரமும் கடந்த வாரங்களில் பெரும் பிரச்சினையாகக் கிளப்பப்பட்டது.

கொழும்பினூடாக - விடுதலைப் புலிகள் சக்தி மிகுந்த வானொலி ஒலிபரப்புக் கருவிகளைப் பெற்றிருப்பதாகவும், இது அபாயத்தையே தோற்றுவிக்கும எனவும் - தெற்கில் அடுத்த பிரசாரம் ஆரம்பமானது.

அண்மையில் கொழும்புவந்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளரிடமும் இது தொடர்பாக ஜனாதிபதி மட்டத்திலேயே புகாரிடப்பட்டது.

இந்த வகையில், விடுதலைப் புலிகள் கொண்டுவந்த வானொலி ஒலிபரப்புக்கருவிகள் தென்னிந்தியா வரை ஒலிபரப்புச் சேவையைக் கொண்டு செல் லுமோ இல்லையோ - விடுதலைப் புலிகளே எதிர் பார்த்திராத வகையில், 'புலிகளின் குரலுக்கு' தென் னிந்தியா வரையிலும் ஒரு எதிர்பார்ப்பு நிலை தோற்றுவிக்கப்பட்டுவிட்டது.

அதேவேளை - முன்னாள் தகவல் தொடர்புத்துறை அமைச்சரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ரீரோன் பெர்ண்ான்டோ, புலிகளின் குரல் ஒலிபரப்பு - ஒரு சமூக வானொலியே எனவும், இலங்கையிலுள்ள எவருமே சமூக வானொலிகளைத் தொடங்குவதற்கு தாம் ஆதரவு தருவதாகவும் அறிவித்துவிட்டார்.

இந்த வகையில் அரசாங்கத்தரப்பின் வழியேயும் புலிகளின் குரலை சமூக வானொலியென உத்தியோகபூர்வமாக அங்கீகாரமளிக்கச் செய்வதற்கு, தமது எதிர்ப்பின் மூலம் ஆதரவுதந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சியினரும் பாராட்டுக்குரியவர்களே.

இனி மீதமிருக்கும் -விடுதலைப் புலிகளின் நிர்வாக அமைப்புக்கள் மீதும், நிறுவனங்கள் மீதும் 'பிரச்சினைகளை' கிளப்பி அவற்றின் செயற்பாட்டுத் திறனை உலகெங்கும் பரப்ப எதிர்க்கட்சிகள் முன்வருவார்களேயானால் அதற்குத் தமிழ்மக்களும் தமிழ்கூறும் நல்லுலகமும் - காலாகாலத்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டியே இருக்கும்.-

**'ஜிப்ஸீஸ்' பாடகரைத் தாக்கிய விவகாரம்!**

# ரத்வத்த, மகனின் மன்னிப்பை ஏற்க மறுத்தார் சுனில் பெரேரா!

(கொழும்பு)

'ஜிப்ஸீஸ்' இசைக்குழுவின் பாடகர் சுனில் பெரேரா தாக்கப்பட்டது தொடர்பாக, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தவும் அவரது மகன் மஹேன் ரத்வத்தவும் மன்னிப்புக்கோரியபோதும், அவரது மன்னிப்பை சுனில் பெரேரா நிராகரித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஹில்டன் ஹோட்டலில் நடந்த இசை நிகழ்ச்சியின் பின்னர், பாடகர் சுனில் பெரேராவை, மஹேன் ரத்வத்த தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து அவரைக் கைதுசெய்யப் பொலிஸ் அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இரத்மலானையில் உள்ள பாடகர் சுனில் பெரேராவின் வீட்டுக்கு - நேற்றுமுன்தினம் இரவு, ஜெனரல் ரத்வத்தவும், அவரது மகன் மஹேன் ரத்வத்தவும் சென்று மன்னிப்புக்கோரினர். ஆனால், பாடகர் சுனில் பெரேரா இதனை நிராகரித்துவிட்டார்.

அத்துடன் தாம் நீதிமன்றத்தில் சந்தித்துக் கொள்வதாகவும் அவர்களிடம் சுனில் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் குழுக்கள் - மஹேன் ரத்வத்தவைக் கைது செய்வதற்காக தேடுதலில் ஈடுபட்டுள்ளன. அவரது மனைவியிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

## பாடசாலைச் சீருடைத்துணி வீடு வீடாக விநியோகம்!

(நமது நிருபர்)

பாடசாலை மாணவர்களின் வீடுகள்தோறும் சீருடை விநியோகிக்கும் புதிய திட்டம் இம்முறை அறிமுகம் செய்யப்படவுள்ளதாக பாடசாலைக் கல்வியமைச்சர் சுரணிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலர்கள் ஊடாக, வீடு வீடாக சீருடை விநியோகம் இடம்பெறும். இதற்கு கிராம அலுவலர்கள் சரியான புள்ளிவிபரங்களைச் சேகரித்து, எந்தப் பிரச்சனையும் எழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலரும் கிராம அலுவலர்களை வழிநடத்த வேண்டும்.

ஜனவரி மாதத்துக்குள் பாடசாலைச் சீருடைகளை வழங்கும் நடவடிக்கை முற்றுப்பெறவேண்டும். இனிவரும் காலங்களில் பாடசாலை தொடர்பான அனைத்து நலத்திட்டங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாகவே வழங்கப்படும். இதற்கான சட்டம் ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்றும் அமைச்சர் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்களுக்கு கிழக்கில் தனியான சமஷ்டி அமைப்பு

### அதாவுல்லா அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

வட-கிழக்கு இணைந்ததான சுயாட்சித் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தமிழர்களுக்கு வழங்க முற்படுமானால் - கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கும் தனியான சமஷ்டித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று பிளவுபட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

கலதாரி ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அதாவுல்லா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வு காண்பது என இணக்கம் காணப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கும் சமஷ்டித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் எனவும் அதாவுல்லா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

**பிரதம நீதியரசருக்கு எதிராக வழக்குத் தாக்கல்**

## நீதிபதிகள் சங்கத் தலைவர், செயலாளர் சங்கத்தினால் பதவி நீக்கப்பட்டனர்!

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த நீதிபதிகள் சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை அச்சங்கம் பதவியில் இருந்து நீக்கியுள்ளது.

நீதிபதிகள் சங்கத்தின் கூட்டம் சனியன்று மாலை இடம்பெற்றது. இதில் 150 இற்கும் அதிகமான நீதிபதிகள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக அடிப்படை உரிமைமீறல் வழக்கைத் தாக்கல் செய்த நீதிபதிகள் சங்கத் தலைவர் சுனில் பெரேரா, மற்றும் சங்கத்தின் செயலாளர் ஜி.ஜி.குணதிலக ஆகியோரைப் பதவியில் இருந்து நீக்குவதென முடிவுசெய்யப்பட்டது.

சங்கத்தை ஆலோசிக்காமல் வழக்குத் தாக்கல் செய்த குற்றச்சாட்டின்பேரிலேயே இவர்களின் பதவிகள் பறிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. நீதிபதிகள் சங்கக் கூட்டங்களை குழப்பினார் என சரத் என்.சில்வாவுக்கு எதிராக ஐந்து நீதிபதிகள் வழக்குத் தாக்கல் செய்திருந்ததும் இதற்கு சட்டத்தரணிகள் சங்கம் ஆதரவு வழங்கியதும் தெரிந்ததே.

## புதுடெல்கி சென்ற திலக் மாரப்பன ஜோர்ஜ் பெர்னாண்டஸை சந்திப்பார்!

(சென்னை)

இந்தியாவுக்குச் சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஜோர்ஜ் பெர்னான்டஸின் விசேட அழைப்பின் பேரில் திலக் மாரப்பன புதுடெல்கிக்கு பயணத்தை மேற்கொண்டார். அங்கு ஜோர்ஜ் பெர்னான்டஸும் திலக்மாரப்பனவும் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலை குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

அத்துடன் திலக் மாரப்பன, வாரணாசிக்கும் செல்வார் எனத் தெரிய வருகின்றது. இதேவேளை, சென்னையில் அமைச்சர் திலக் மாரப்பன, ரயில் பெட்டி தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த திங்களன்று அங்கு சென்ற அவர், நவீன ரயில் பெட்டிகளை இலங்கைக்குக் கொள்வனவு செய்வது குறித்து அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளார். இவருடன் ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் சென்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி நிதியத்தின் செலவீட்டில் முறைகேடு!

### கணக்காய்வாளர் நாயகம் விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தின் செலவீடுகள் குறித்து அரசாங்கக் கணக்காய்வாளர் நாயகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

1996/98ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி நிதி செலவிடப்பட்ட விதம் குறித்துப் பல பிரச்சனைகளை அவர் கிளப்பியுள்ளார். இக்காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட அதிகமாகச் செலவு செய்யப்பட்டு பற்றாக்குறை கணக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் இது தொடர்பான கணக்குவழக்குகளும் கடந்த ஆறு வருடங்களாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது. இதுதொடர்பாக அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் புதிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

## 'புத்தரின் பெயரால்' திரைப்படம் நாளை லண்டனில் திரையிடப்படும்!

(கொழும்பு)

'புத்தரின் பெயரால்' என்ற திரைப்படம் நாளை லண்டனில் உள்ள 'வெஸ்ட் என்ட்' இல் திரையிடப்படவுள்ளது.

இத்திரைப்படம் ஒஸ்லோவில் இடம்பெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் கடந்தவாரம் திரையிடப்பட்டிருந்தது. இலங்கையில் இனப்பிரச்சனையோடு தொடர்புடைய கதையைக் கொண்ட இத்திரைப்படம் தொடர்பாக இலங்கை அரசு அதிருப்தி தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சத்திரசிகிச்சையின் பின் குழந்தை மரணம்!

### களுபோவில வைத்தியசாலை மீது முறைப்பாடு

(கொழும்பு)

களுபோவில வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை, இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணமானது தொடர்பாக, பாணந்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

தனுஷ்க டில்ஷான் என்ற ஒன்றரை வயதுக்குழந்தையின் பின்புறத்தில் ஏற்பட்ட கட்டியை களுபோவில வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சத்திரசிகிக்சை மூலம் நீக்கினர். 9 ஆம் திகதி சத்திரசிகிச்சை செய்யப்பட்டு 13 ஆம் திகதி குழந்தையை வீட்டுக்குக் கொண்டுசெல்லுமாறு கூறப்பட்டது.

ஆனால், சத்திரசிகிச்சை செய்யப்பட்ட காயத்திலிருந்து தொடர்ந்தும் இரத்தப் பெருக்கு ஏற்பட்டதால் மீண்டும் களுபோவில ஆஸ்பத்திரிக்கு குழந்தையைக் கொண்டுவந்தபோது, வைத்திய அதிகாரிகள் அதுகுறித்து கவனம் செலுத்தவில்லை.

இதனால், குழந்தை அன்றையதினமே இறந்து விட்டதாகவும் இதற்கு களுபோவில வைத்தியசாலையினரே காரணம் என்றும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பொலிசார் விசாரணகளை ஆரம்பித்துள்ளனர்.

# பொப்பிசை மேடைகளில் கொடிகட்டிப் பறந்தபோதே

# கூத்தை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை எழுந்தது

**ஈழத்தின் தென்மோடிக் கூத்துமரபில் எஞ்சி நிற்கின்ற விரல் விட்டு எண்ணத்தக்க அண்ணாவியார்களில் பேக்மன் ஜெயராஜாவும் ஒருவர். வளன்புரம்- கொழும்புத்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், பூந்தான் யோசப்பு காலம் முதல் இன்று வரை மிகத் தீவிரமாக கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர். தென்மோடிக் கூத்தின் அடிப்படை மரபுகளை வகைத்தூய்மையுடன் சான்று பகரத்தக்க ஆளுமையையும், ஆற்றலையும் கொண்டவர். திருமறைக் கலாமன் றத்தின் நாட்டுக்கூத்துப் பொறுப்பாளராகச் செயற்பட்டுவருகிறார்.**

***கேள்வி:-*** நீங்கள் முதன் முதல் எத்தனை வயதில் நாட்டுக் கூத்தில் ஈடுபடத் தொடங்கினீர்கள்?

***பதில்:-*** 18 வயதில் இருந்து இதில ஈடுபடத் தொடங்கிவிட்டேன். பூந்தான யோசப்புவினுடைய சங்கிலியன் நாட்டுக் கூத்தில்தான் முதன்முதல் நடித்தேன். அதற்குப்பிறகு நாவாந துறை வின்சன் டி போலின் நாட்டுக கூத்துகளிலும் நடித்தேன். அதிகமாகப் பூந்தான் யோசப்புவினுடைய நாட் டுக் கூத்துக்களிலேதான் நடித்தேன். தற்போது திருமறைக் கலாமன்ற நாடகங்களிலும் நடிக்கிறேன்.

***கேள்வி:-*** பூந்தான் யோசப்பு, நாட்டுக்கூத்து வரலாற்றில் மிகவும் முக்கியமானவர். அவரது "நவரச நாட டுக்கூத்து கலாமன்றம்" ஆரம்பிக்கப் பட்ட காலங்களிலேயே அதனுடன் இணைந்து செயற்பட்டீர்களா?

***பதில்:-*** நவரச நாட்டுக்கூத்து கலாமன்றத்தினை உருவாக்கிய ஆரம்பகர்த்தாக்களில் நானுமொரு வன். பிரான்சிஸ் ஜெனமும், நானுமே இதனை உருவாக்க வேண்டுமென் பதில் தீவிரமாக இருந்தோம். ஜெனம் செயலாளராக இருந்தார். நான் உத விச் செயலாளராக இருந்தேன்.

***கேள்வி:-*** இதுவரை எத்தனை கூத்துக்களில் நீங்கள் நடித்துள்ளீர்கள்?

***பதில்:-*** இதுவரை ஏறத்தாழ 40 கூத்துக்களுக்கு மேல் நடித்துள்ளேன்.

***கேள்வி:-*** நீங்கள் நடித்த கூத் துக்களில் எவ்வாறான பாத்திரங்களை ஏற்றீர்கள்?

***பதில்:-*** நான் அநேகமாக நாடகக காரன் பாத்திரத்தையே ஏற்றேன். நாட கக்காரன் என்பது கதாநாயகன் பாத்திரத்தையே குறிக்கும் என்னுடைய இயல்பான சாரீரவளம் இதற்கு ஏற்ற தாக அதிகம் அமைந்திருந்தது. ராஜ பாட் பாத்திரங்கள் நான் அதிகம் ஏற்கவில்லை.

***கேள்வி:-*** இதுவரை எத்தனை கூத்துக்கள் பழக்கியுள்ளீர்கள்? சில வற்றைக் கூறமுடியுமா?

***பதில்:-*** ஏறத்தாழ இருபது கூத் துக்களுக்கு மேலே பழக்கியிருப் பேன். ஜெனோவா, விஜயமனோ கரன், எஸ்தாக்கி, சங்கிலியன், மனம் போல் மாங்கல்யம், சவேரியார், அரிச




சந்திரன், சோழன்மகன், கருங்குயில் குன்றத்துக்கொலை .... மரியதாசன்.... என அது நீண்டுசெல்லும்.

***கேள்வி:-*** விடிய விடிய நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்ட காலத்திலேயே அதிகம் நடித்தீர்கள்... பின்னர் கூத்தை சுருக்கி மேடை ஏற்ற வேண்டிய தேவை ஏன் எழுந்தது?

***பதில்:-*** அது ஒரு முக்கிய கால கட்டம் பொப்பிசை மேடைகளில் கொடி கட்டிப்பறந்தகாலம், அதைப் பார்க் கிறத்துக்கே ஒரு தனிச் சமூகம் தோற்றம் பெற்றிருந்த நேரம்... அதற்கு ஈடு கொடுக்கவேண்டிய தேவை இருந் தது. அதைவிடச் சினிமா, இசை நாடகங் கள் இவை எல்லாம் நேரச்சுருக் கத்தைக் கொண்டிருந்தன. இதனால் கூத்தில் சில மாற்றங்களை ஏற்படு த்த வேண்டுமென்ற தேவை இருந் தது. அதனால் தான் நவரச நாட டுக்கூத்து கலாமன்றத்தினை ஆரம் பித்து, கூத்தினை நவீனப்படுத்தி மேடை ஏற்றினோம்.

***கேள்வி:-*** என்ன வகையான மாற றங்களை கூத்தில் ஏற்படுத்தினீர்கள்?

***பதில்-*** நேரத்தைச் சுருக்கினோம் .பாடல களை மெருகுபடுத்திப் பாடமுற்பட் டோம்... கூத்தின் கதையை இறுக்க மானதாக ஆக்கினோம். நடிப்புக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தோம். இவ்வாறான பல மாற்றங்களைச் செய் ததாலேயே, பிறகு கூத்துக்கள் செல வாக்குப்பெற்றன.

***கேள்வி:-*** கூத்தின் பாடல்களை மெருகுபடுத்தியது தவறு என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்பு கிறீர்கள்?

***பதில்:-*** இது தவறு என்று கூறு பவர்கள், அந்த நேரத்தில் கூத்துக்கு இருந்த நெருக்கடியை நினைத்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக- ஒரு சம்பவம் கூறவேண்டும் நான் வீரசிங்கம் மண்டபத்தில் சங்கிலியன் கூத்துப் பாடுகின்றபோது 'கொச்சகம்' இராகம் பாட கல்லொன்று வந்து என் நெற்றி யில் விழுந்தது... அந்தளவுக்கு கூத் தின் இராகங்கள் இளைஞர்களால் வெறுக்கப்பட்டது... எனவேதான் அவ வாறான இராகங்களை மெருகூட்ட வேண்டுமென்று நினைத்தோம். அததோடு நாம் மரபை மறந்துவிடவோ அல்லது அழித்துவிடவோ இல்லை. இன்றும் பழைய இராகங்களும் தெரியும்... மரபை அறிந்து கொண்டே அதனை மீறவும் வேண் டும்... அது அடிப்படை. அந்த நேரத் தில் நாம் மேற்கொண்ட பல செயற் பாடுகள்தான் பாடசாலை மட்டத்தில் கூட கூத்தைக் கொண்டு செல்வ தற்கு இலகுவாக இருந்தது.

***கேள்வி:-*** நாட்டுக்கூத்துக் கலா நிதி பூந்தான்ஜோசப்புவைக் குருவாகக கொண்டவர் நீங்கள்... அவரைப் பற்றி சிறிது கூறமுடியுமா?




***பதில்:-*** தென்மோடி நாட்டுக் கூத்தைப் பொறுத்தவரையில், பூந் தான் மிக முக்கியமான 'சக்கரவர்த்தி' என்றால் அது மிகையல்ல. அந்தள வுக்கு கூத்தில் மிக முக்கியமான ஒரு வராகத் திகழ்கின்றார்.

***கேள்வி:-*** திருமறைக் கலாமன் றத்தின் "நாட்டுக்கூத்துப் பொறுப்பா ளராக" தாங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றீர்கள். அதில் எவ்வாறு இணைந்து கொண்டீர்கள்?

***பதில்:-*** பூந்தாருக்குப் பிறகு கூத்தை வளர்க்க வேண்டுமென்று தீவி ரமாகச் செயற்பட்டவர் அருட்தந்தை மரியசேவியர்தான். எண்பதுகளின் தொடக்கத்தில் கூத்து அழிந்து போய் விடுமோ என்று நாங்கள் பயப்படும் அளவுக்கு இல்லாமலேபோனது. அந்த வெற்றிடத்தில் கைகொடுத்தது திரு மறைக் கலாமன்றமே. அண்ணாவியார் பாலதாசும், நானும் அதில் இணைந்து கொண்டு அந்த முயற்சியைத் தீவிரப படுத்தினோம். பூந்தாருக்கு மேலாக மரியசேவியர் அடிகள் அந்தக் கூத்தை இலங்கை முழுவதும் கொண்டு போனது மட்டுமல்லாது, வெளிநாடுகளிலும் கொண்டுபோய்ப் போட்டு, இதுதான் எங்களுடைய தேசியக்கலை என் பதை நிரூபித்து விட்டார். இன்றைக்கு கூத்தை வளர்க்க வேண்டும் என்ற அவரது முயற்சிக்கு இணையாக யாரும யாழ்ப்பாணத்தில் செயற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

***கேள்வி:-*** தற்போது திருமறைக் கலாமன்றத்தினால் கூத்துத் தொடர் பாக என்ன செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றீர்கள்?

***பதில்:-*** தற்போது இந்தக் கூத்தில் இருக்கிற இராகங்களை எல்லாம் அடுத்த சந்ததிக்கு கொடுக்கக் கூடிய மாதிரியான "பதிகை" என்ற ஆவணச் செயற்பாடு ஒன்றை மேற் கொள்கின்றோம். அதைவிட "அம்பிகா பதி" நாட்டுக்கூத்து பழக்கிக் கொண் டிருக்கிறோம் அடுத்த வருடம் பாடசாலை மட்டத்திலும், கிராம மட்டத்திலும் நாட்டுக்கூத்துப் போட்டி ஒன்று நடத்த திட்டமிட்டுள்ளோம் அத்துடன் அடுத்த வருடம் மாசி மாதத்தில் பெரிய கருத்தரங்கு ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றோம். பொதுச் செயலாளர் ஜோன்சனும் இதில் தீவி ரமாக ஈடுபடுகின்றார்.

***கேள்வி:-*** தென்மோடி நாட்டுக் கூத்துத் துறையைப் பொறுத்தவரை இன்று வாழுகின்ற அண்ணாவிமார் களில், குறிப்பிடத்தக்கவர்களாக நீங்கள் யாரைக் கூற விரும்புகின்றீர்கள்?

***பதில்:-*** இது சங்கடமான கேள்வி தான். அண்மையில் மறைந்த நாரந் தனை அண்ணாவி அருளப்பு மிக சிறந்த தகைமை வாய்ந்தவர். அவர் இறந்து விட்டார்...பாஷையூர் குண சிங்கம் அவரும் இறந்து விட்டார். சில் அவரை அண்ணாவி என்று ஏற்ப தில்லை. ஆனால், தகைமை உள்ள வர் நாவாந்துறை வின்சன் டீ போல். இன்று அண்ணாவிமார் என்று சொல் கிறவர்கள் எல்லாரையும் நான் சொல்லமாட்டேன். கூத்தினுடைய காப்பு தொடக்கம மங்களம் மட்டும் இராகம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

நாவாந்துறை பெலிக்கான், குருநகர் சாமிநாதர், பாஷையூர் அல்பிரட் பாலதாஸ்...கூத்தில் பாலதாசுக்கு ஒரு சிறப்பிடம் இருந்தது. காரணம் கூத்துக்கு ஹார்மோனியத்தை சரியாக பயன்படுத்தியது அவர்தான். இன்றைக கும் பாலதாசுவுக்கு நிகராக யாரும் இல்லை என்றுதான் சொல்லவேணும்.

***கேள்வி:-*** நிறைவாக நீங்கள் கூற விரும்புவது?

***பதில்:-*** நாட்டுக்கூத்து எங்களு டையு பாரம்பரியக் கலை. அது பேணப படவேண்டியது, மிகமிக அவசிய மானது. இன்றைக்கு நாகரிகம் மிக வேகமாக வளர்ந்துகொண்டு வருகி றது. இதற்குள் கூத்து அழிந்து போகாமல் இருக்க எல்லோரும் முயற்சி செய்யவேண்டும்... அதற்கு ஆதரவும் வழங்கவும் வேண்டும். இது எங்களுடைய கடமை.

நேர்காணல்:எஸ். சாந்தகுமார்

# உளம் கவர்ந்த திருவாசகம்

**த**மிழ் இலக்கியத்தின் தகை மைக்குத் தலையாய எடுத்துக்காட் டாய் விளங்கும் திருவாசகம் தமி ழில் எழுந்த பக்தி இலக்கியங்களுள் மிக உன்னத நிலையை வகிக்கின் றது.

ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலகெலாம் உய்த்து உணர்ந்து, ஓதற்கரியவனை எம் உள்ளத் தில் இருத்தி, எல்லையற்ற உவகைப் பேற்றினைத் தரும் திருவாசகம் தமிழ மக்களை மட்டுமல்ல உலகப் பேரறி ஞர்களையே தன்பால் ஈர்த்துள்ளது.

**போப்பையர் புகன்ற கருத்து**

தமிழகத்திற்கு கிறிஸ்தவம் பரப்பவந்து இறுதியில் இன்பத் தமி ழுக்கு தம் இதயத்தைப் பறிகொடுத்த தவத்திரு போப்பையர் அவர்கள் தமது 80 ஆம் அகவையில் 1900ஆம ஆண்டு திருவாசகத்தினை ஆங்கிலத தில் மொழிபெயர்த்து தம் வாழ்வின் நோக்கை நிறைவு செய்தார்.

தம் மொழிபெயர்ப்பு நூலின் முன் னுரையில்- திருவாசகத்தின் தித்திக் கும் தன்மையினை தெய்வீக அரு ளினை ஊட்டும் பாங்கினை பின்வரு மாறு கூறுகிறார்,

இயற்கையுடன் கொளளும் தொட ர்பு நானிலம் முழுவதை யும் உறவ க்கும் இவ்வடியாரின் பாக்களைப் படிக்கும்போது எவரும் எல்லை மீறிய உணர்ச்சி வயப்படாதிருக்க முடி யாது எனப் புகழ்கின்றார்

**சித்தாந்தத்தின் உள்ளடக்கம்**

இந்நூல் செந்தமிழைத் தழுவி நிற்கும் சித்தாந்தக் கோட்பாட்டின் உள்ளடக்கமாகவும் விளங்குகிறது. முழுமுதற் பொருளாம் சிவனை மாணிக்கவாசகர் ஓரிடத்தில் "சைவா போற்றி" என்று வாழ்த்தும் வாழ்த் துரையும் இதற்குச் சான்றாகும். இதனாற்றான் திருவாசகத்தில் ஊறித்திளைத்த போப்பையர் தமிழரின் சித்தாந்த செந்நெறியைப் பற்றிக் குறிப்பிடுகையில் "The Choicest Product Of the Dravidian intellect" (திராவிட மூளையின் தெரிந் தெடுத்த படைப்பு) என்று வியந்து போற்றினார்.

இவ்வளவு பெருமை தமிழுக்கு உண்டென்பதனால்தான் தமிழை தமிழன் அழியாது காக்கவேண்டும் என்பதைப் பின்வருமாறு போப் பையர் உள்ளம் உருக இயம்பி யுள்ளார். "சாகும் நிலையிலுள்ள ஒரு இனத்தின் மொழிக்கு, சா ஏற் படின் தவிர்க்க முடியாத நிலையில் நாம் அதனை ஏற்றே ஆக வேண்டும். ஆனால், தமிழினத்தைப் பொறுத்த வரையில் இந்நிலையை நாம் ஏற்க முடியாது. இந்நிலை ஏற்படாதிருக்க விண்ணுலகே எமக்குத் துணை நிற்க! செத்த மொழிகள் பலவும் பயன்தரும் நிலையில் உள்ளன. அவற்றின் சாம பலிற் கூட பெருந் தீ ஒளிவிடுகிறது. ஆனால், வாழும் மொழிகள் எமக் குத் தரும் பயனோ எல்லையில் அடங்காது. உறுதிவாய்ந்த பழைய மரங்களில் எத்தகைய மலர்கள் மலர இருக்கின்றன என்றோ, எத்தகைய கனிகள் கனிய இருக்கின்றன என்றோ நாம் எளிதிற் சொல்ல முடியாது. பெருமை அறியாது வெட்கித் தலை குனியாது, உன் மொழியின் பெருமை அறிந்து பெருமை கொள்வாயாக." என்றார்.

இந்தியாவின் முன்னாள் குடியர சுத் தலைவராகவும், உலகில வாழ்ந்த தலைசிறந்த மெய் விளக்க அறிஞரா கவும் - தத்துவஞானியாகவும் கொள்ளப்படும் முனைவர் (டாக்டர்) இராதாகிருஷ்ணன் அவர்கள் திருவா சகத்தின் திறன் பற்றிக் குறிப்பி டுகையில், திருவாசகம் என்னும் நூல் உயிர் (ஆன்மா), அறியாமை, ஆசை ஆகிய பந்தங்களில் இருந்து நீங்கி, உண்மை ஒளியும் அன்பும் ஆகிய விடுதலை அரண்மனையுள் புகுவதையும், அவ்வுயிரின் அறிவுக் கண் திறப்பதையும், அதனால் விளை யும் ஆனந்தத்தையும் பெருமிதத் தையும் அகத்தின் அலைவு, உலைவு, போராட்டம் முதலியவைகளைப் போக்கி இறைவனோடு இதயம் கலக்கும் இன்பத்தையும், அமைதியை யும் அழகான பாடல்கள் எடுத்துரைக் கிறது என்கிறார்.

இவ்விதம் உலகத்தவர் உள்ள மெலாம் நிறைந்து ஒப்பிலாத் தன்மை பெற்றிருக்கும் இந்நூல், முத லும் முடிவுமிலா உலக முதல்வனை ஆட்கொண்டது வியப்பில்லை. அதனாற்றான் ஏகனாய், அனேகனாய் விளங்கும் எம் இறைவன்- மணிவா சகரின் எழுதுவினைஞராக மாறி, திரு வாதவூரர் செப்பிய திருவாசகத்தை தம் திருக்கையினால் எழுதி, எம் செய்துள்ளார். இவ்வாறு இறைவன் தொண்டனுக்கு தொண்டனாய் மாறி தொண்டியற்றியமையே.

*"எழுதிடும் வேலை பூமேல்*
*இருப்பவன் இயற்றப் போக்கி*
*எழுதுதல் இல்லா நூல்சொற்(று)*
*இனிதமர் தரு மாதேவை*
*எழுதெழு தெனப்பல பாச்சொற்(று)*
*இயைதரப் பெயரும் ஈற்றில்*
*எழுதிடச் செய்த கோமான்*
*இணையடி முடிமேல் வைப்பாம்"*

என்று மகாவித்துவான் திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர் களை கனிவுமிகு கற்பனைச் சுவை யுடன் பாடத் தூண்டியது போலும்.

இந்த அருட்பேற்றினைத் திருவாச கம் பெற்றதனாற்றான் வேதத்தை வென்று, வேதம் ஓதும்போது எம் விழிநீர் பெருகாநிற்கத் தன்னை ஓதும்போது, எம் நெஞ்சத்தை உருகச் செய்து, எம் விழிகளில் நீர் பெருவெள்ளமெனப் பெருகச செய்கிறது. இதனாற்றான் போலும் "மலம் கெடுத்து மனம் கரைக்கும்" இத் திருவாசகத்திற்கு தம் உள்ளத் தைப் பறிகொடுத்த மறைமலையடிக ளார், தமக்கே உரிய விழுமிய தனிநடையில் "திருவாசகத்தை ஓதி யும் உருகாத ஓருயிர் இருக்கு மாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ அன்றி மண்ணென்று வகுக்குதுமோ, இரும்பென்று இயம் பதுமோ, சொன்மின்காள்" என்று இயம்பியுள்ளார்.

ளில் ஒரு பதிகமாக விளங்கும் திரு வெம்பாவை-இருபது பாடல்களின் உள்ளடக்கமாய் விளங்குகிறது. இப் பதிகம் இறையருள் தோய்ந்த இன் பத்தமிழ் ஊற்றாகப் பெருக்கெடுக்கிறது. சிவபுராணம், போற்றித் திருவகலும் யாவரும் இனிது ஓதி மகிழ்தற் குரிய வழிபாட்டு நூலாக விளங்கு கின்றது. திருச்சதகம் மணிவாசக ரின் குரு பக்தியையும், அல்லது ஞான பக்தி வைராக்கிய நலன்களையும் உணர்த்துகிறது. நீத்தல் விண்ணப் பம்- 'இறைவனே! என்னைக் கைவிட்டு விடாதே' என அபயக் குரல இடுகின்றது. திருவெம்பாவை- எம் மைத் துயில் எழுப்பி இறையருள் என்ற மார்கழி நீரில் மூழ்கச் செய் கிறது. இறைவனைப் பற்றிய பல திற ஐயவினாக்களுக்கும் தெளிவு தரத்தக்க விடைகளைச் சிறந்த முறை யில் வெளியிடுகின்றது திருச்சாழல். இறைவன் ஆகிய பேரரசனுக்கு உரிய நாடு, மலை, ஆறு, ஊர், கொடி, ஊர்தி, மாலை, படைக்கலன் ஆகிய வற்றைத் திறந்தெரிந்து பாடுகின்றது திருத்தசாங்கம். திருப்பள்ளி எழுச் சிப் பாடல்கள் இறைவனைத் துயில் எழுப்பி இன்னருள் புரிய வேண்டு கின்றன.

திருவாசகம் தமிழகத்தின் தவநூல்; ஞானப்பனுவல்; பக் திப் பெருநூல்; தத்துவக் கருவூலம்; அறி வுக் களஞ்சியம்; உணர்த உள் ளத்தி லிருந்து எழுந்த உயர் ஞான மொழிகள்; அறிவாற் சிவனேயாய மணிவாசகரின் மணி மொழிகள்; பிறவிப்பிணி தீர்க்கும் பெருமரு ந்து; நெஞ்சை நெகிழ்விக்கும் செந்தமிழ்ப்பாட்டு; மடுவனைய வாழ்க்கையிலிருந்து மலைய னைய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் அருட்பாட்டு.


- மா.க.ஈழவேந்தன்

# வை.கோபாலசாமியை விடுவிக்க கோரி ஒரு கோடி கையெழுத்து பெறும் இயக்கம்

## முதலாவது கையெழுத்து கருணாநிதியிடத்தில்

(சென்னை)

தமிழகத்தில் ஆட்சியிலுள்ள ஜெயலலிதாவின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்தும், பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவை விடுவிக்கக் கோரியும் ஒரு கோடி கையெழுத்துப் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



ஒரு கோடி கையெழுத்து மகஜரின் முதலாவது கையெழுத்தை தி.மு.கவின் தலைவர் மு.கருணாநிதி இட்டுள்ளார். ம.தி.மு.க அவைத்தலைவர் எல்.கணேசன், கருணாநிதியின் வீட்டுக்குச் சென்று மகஜரில் முதலாவது கையெழுத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதையடுத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஒரு கோடி பேரிடம் கையெழுத்துப் பெறும் இயக்கம் தமிழகம் முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# அரச ஊழியர் காப்புறுதி டிசம்பர் 31 வரை பெறலாம்

(மானிப்பாய்)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் வெளி நோயாளர் பிரிவு மருத்துவம், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றுக்கு வழங்கப்படுகின்ற காப்புறுதிக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 31ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என சகல அரச சேவை திணைக்களகங்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.


வரையறுக்கப்பட்ட இலங்கைக் காபபுறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும். 2002ஆம் ஆண்டுக்காக மேற்படி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுவோர். 31ஆம் திகதிக்கு முன்பு தமது கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

கண்ணாடிக்காக 2 ஆயிரம் ரூபாவும வெளிநோயாளர் பிரிவு சிகிச்சைக்காக சிகிச்சைக்கேற்றவாறு கொடுப்பனவுகளும் அக்ரஹார காப்புறுதி மூலம் வழங்கப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் மேற்படி இரு பிரிவுகளுக்கும் காப்புறுதிக் கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

(100)





பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையில் பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்திய கண்காட்சியை கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம் திறந்து வைப்பதையும் , கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# தமிழீழ வைப்பகம் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது

## டெய்லி மிரர் கருத்து

(கொழும்பு)

புலிகளின் தமிழீழ வைப்பகம துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலத்தினசரியான 'டெய்லி மிரர்' செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ வைப்பகத்தில் வருமானம் அதிகரித்து வருவதாகவும், இது 20 ஆயிரத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதாகவும் செய்தி வெளியிட்டுள்ள அப்பத்திரிகை, வைப்பகத்தின் முறையான நிர்வாக நடவடிக்கைகளால் கடன்களைப் பெற்றவர்கள் உரிய காலத்தில் அவற்றைத் திருப்பிச் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

# 84 இலங்கையரை நெதலார்ந்து திருப்பியனுப்பும்

நெதர்லாந்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 84 இலங்கைப் பிரஜைகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவர்கள் அனைவரும் இன்று இலங்கை வந்து சேர்வார்கள் என்று பொலிஸ் அத்தியட்சகர் சமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரி இவர்கள சமர்ப்பித்த விண்ணப்பம் அனைத்தும் நெதர்லாந்து அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இநத 84 பேரும் அகதிகளாக நீண்ட காலம நெதர்லாந்தில் தங்கியிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தேவநாயகம் காலமானார்

முன்னாள் அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகம் தனது 92வது வயதில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 4 மணியளவில் காலமானார்.

# ஐ.சி.ஆர்.சி. நெடுந்தீவு சென்றது

நெடுந்தீவு நிலைமைகள் தொடர்பாக ஆராய சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் நேற்று நெடுந்தீவு சென்று திரும்பியுள்ளனர்.

நேற்றைய தினம் காலை 11 மணிக்கு நெடுந்தீவிற்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுடன் கலந்துரையாடல் நடத்தினர். இதன்போது, மேற்படி சங்கமானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை மட்டுமே வழங்கும். இதனடிப்படையிலேயே நாம் நெடுந்தீவிற்கு வந்துள்ளோம் என சர்வதேச செஞ்சிலுவை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

(113)

# இன்றைய நாள் இனிய நாள்

## 18-12-2002 - புதன்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 03 ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச சதுர்த்தசி - இரவு 12.18 வரை அதன் மேல் பூரணை

*நட்சத்திரம்* :- ரோகிணி - பின்னிரவு 5.35 வரை அதன் மேல் மிருகசீரிடம்.

**மேடம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களினால் சண்டை, மனச்சஞ்சலம், தொழில் முன்னேற்றம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**இடபம்** :- விருந்தோம்பல், மனநிறைவு, பணவரவு, தெய்வ வழிபாடு, தொழில் முன்னேற்றம் குறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- மனத்தில் கர்வநிலை உருவாதல், தேவையற்ற செலவு, வீண் அலைச்சல், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- சமய/சமூக சேவையில் நற்பெயர், உளப்பூரிப்பு, நண்பர்கள் உறவினர் சுற்றுலா மகிழச்சி, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம்.

**சிங்கம்** :- கௌரவநிலை, மனமகிழ்ச்சி, வெளியிடப்பிரயாணம், தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வ வழிபாடு, தொழில் முன்னேற்றம் குறைவு, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- உளநிலையில் மாற்றம், புதிய ஒப்பந்தம், புதிய முயற்சி தொடங்குவது நன்றல்ல, தொழில் முன்னேற்றம், மாணவர்கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம்.

**விருச்சிகம்** :- உடல்குளிர்ந்த உணவு, மங்கையர் முகமலர்வு, விதம்விதமான உடை அணியும் சிந்தனை, தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம், தேவையற்ற செலவு.

**தனு** :- பழையகடன் வசூல், எதிரி மௌனம், புதிய முயற்சி முன்னேற்றம், செய்தொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- புத்திரர் மகிழ்ச்சி, உடனலம் நன்று, தெய்வவழிபாடு, பொதுசேவையில் மதிப்பு, தொழில் முன்னேற்றம், மாணவர்கல்வி முன்னேற்றம், வியாபாரமுன்னேற்றம்.


**கும்பம்** :- கொடுக்கல் வாங்கல் சிக்கல், ஏமாற்றம், வீட்டில் செலவு, பெண்கள் சுகயீனம், தொழில் முன்னேற்றம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- உளப்பூரிப்பு, செய்தொழில் முன்னேற்றம், ஆடை ஆபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

வாழ்க வளமுடன்

## நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



இரண்டாவது அகவையில்




HAPPY BIRTHDAY

பெயர் :அ.பானுகா
முகவரி:அடுவம்பற்று ,
அளவெட்டி.

பெயர் :பு.சாஜகதாசன்
முகவரி:மத்தொனி,
கரவெட்டி.

இரண்டாவது அகவையில்





ஆறாவது அகவையில்



பெயர் :சா.சாருஜன்
முகவரி:பாரதி லேன்,
நாயன்மார்கட்டு.

பெயர் :ஜெ.துஷாந்தினி
முகவரி:கற்கோவளம்,
பருத்தித்துறை.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

--------------------------
பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E.mail: thangan 672002 @ yahoo.com
T.P.: 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தங்கேணி.
Better place for your Children
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
(சி-186)

# தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை; நோயாளிகளுக்கு சிகிச்சைகள் ஆரம்பம்!

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்ததையடுத்து, நேற்று நடைபெற்ற முதலாவது கிளினிக்கில், நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். இவர்களுக்கான சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு, கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட புற்றுநோய் வைத்திய நிபுணர் வாணி பிள்ளையும், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களான சாமினி, தாரணி, வேதநாதன் ஆகியோரும் வந்திருந்தனர். அவர்களுடன் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி நவமலர் கனகரட்ணமும் சமூகமளித்திருந்தார். சுகாதார உத்தியோகத்தர்கள் உதவிப் பணியில் ஈடுபட்டிருந்தனர். நோயாளர்கள் செல்வதற்கு




வசதியாக வாகன ஒழுங்குகளை பிரதேசசெயலரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வைத்தியசாலையில், நோயாளர்களின் நலன்கருதி தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தினர் தேநீர்சாலையை நிறுவியிருந்தனர்.

இச்சிகிச்சை இன்றும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து எதிர்வரும் ஜனவரி 7, 8 ஆம் திகதிகளிலும் சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன. (68)

## விமானநிலையத்தில் தமிழன்பன் மீது விசாரணை

(கொழும்பு)

மேற்கு ஐரோப்பாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலைய மூடாக நேற்று அதிகாலை கொழும்பு வந்த "புலிகளின் குரல்" பொறுப்பாளர் தமிழன்பனும் குழுவினரும் சி.ஐ.டி யினரால் தடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

சுமார் அரைமணி நேர விசாரணைகளுக்குப்பின்னர், அவர்கள் விடுதலைப்புலிகள் என உறுதியான பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டதாக - கொழும்பிலுள்ள பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## வி.பி. முக்கோண கிரிக்கட் போட்டி இலங்கை இங்கிலாந்திடம் தோல்வி


வெற்றிக்களிப்பில் இங்கிலாந்து அணி.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி ஒருநாள் முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், நேற்று இங்கிலாந்து அணி இலங்கையை 43 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

ஸ்கோர் விபரம்- இங்கிலாந்து 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங்கள். இலங்கை 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 249 ஓட்டங்கள்.

இங்கிலாந்து அணித் தலைவர் நஸார் உசையின் மற்றும் ஸ்ரூவட்டின் அபார துடுப்பாட்டத்தினால் இங்கிலாந்து சுலபமான வெற்றியைப் பெற்றது. இலங்கை அணியின் களத்தடுப்பு மிக மோசமான நிலையில் காணப்பட்டது.

## வலி. வடக்குக்கென தனியான பொது அமைப்புக்கள் ஒன்றியம்

வலிகாமம் வடக்குக்கெனத் தனியான பொதுசன அமைப்புக்களின் ஒன்றியப் பொதுக்கூட்டம் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் சி.சிவமகாராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில சகல வலி. வடக்கு பொது அமைப்புக்களையும் கலந்து கொளளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறவே மாட்டோம்

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டை விட்டு எக்காரணம் கொண்டும் ஈ.பி.டி.பி வெளியேறமாட்டாதென அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின்படியான அரசியல் உரிமை தமக்கிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. யாழ். குடாநாட்டை விட்டு வெளியேற்றப்பட வேண்டுமென, விடுதலைப் புலிகள் அரசாங்கத்தைக் கோரியிருப்பதாக வெளியான செய்தி பற்றிக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஐந்தாண்டு யாழ்ப்பாணத் திட்டம் துறைவாரியாக நேற்று ஆராய்வு!

## இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது

2007 ஆம் ஆண்டு வரையான யாழ்ப்பாணத்திட்டம் தொடர்பான வேலைப்பட்டறையின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றன.

நேற்றைய நிகழ்வுக்கு 'RRR' திட்ட ஆலோசகர்களில் ஒருவரான சி.எஸ்.சண்முகலிங்கம் தலைமை தாங்கினார். யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில், ஒவ்வொரு துறைவாரியாக அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தின் பயிர் உற்பத்தி தொடர்பாக எஸ்.ராஜதுரை, கால்நடை வளர்ப்புத் தொடர்பாக வைத்தியகலாநிதி ஞானசேகரன், மீன்பிடி தொடர்பாக ஜே.ஏ.ஜோசப், கல்வி அபிவிருத்தி தொடர்பாக பேராசிரியர் எஸ்.குகதாஸன், மீள்குடியேற்றம் தொடர்பாக எஸ்.நல்லையா, மாவட்ட நிர்மாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக எஸ்.வீரபத்திரபிள்ளை, கலாசார விடயங்களை அபிவிருத்தி செய்தல் தொடாபாக கலாநிதி க.குணராசா, வியாபார அபிவிருத்தி தொடர்பாக எஸ்.வசந்தகுமார் ஆகியோர் திட்டங்களை முன்வைத்தனர். ஒவ்வொரு துறைவாரியாக திட்டம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அத்துறைக்கான அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடலும் நடைபெற்றது.

யாழ்ப்பாண அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாவது நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. இன்று மதியத்துடன் அபிவிருத்தி திட்ட வேலைப்பட்டறை நிகழ்வுகள் நிறைவடையும்.

### தமிழ்....

அமைப்பு முறை குறித்து இரு தரப்பினரும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

வட- கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சுவிஸ் தூதுவரிடம் எடுத்துக் கூறினார். உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாமல் அபிவிருத்தி சாத்தியப்படாது எனவும் அவரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு பகுதிகளுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு - சுவிஸ் நாடு தொடர்ந்தும் உதவியையும், ஆதரவையும் வழங்கும் எனவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு தம்மாலான உதவிகளையும் ஆலோசனையையும் வழங்குவோம் எனவும் சுவிஸ் தூதுவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன். சுவிஸ நாடு தமிழ் மக்களுக்கு தொடர்ந்து தனது உதவியையும் ஆதரவையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொணடதுடன், தாம் அண்மையில் நோர்வே சென்று, பின் சுவிஸ் நாட்டுக்குச் சென்றபோது தம்மை வரவேற்ற சுவிஸ் மக்களுக்கும் சுவிஸ் நாட்டுக்கும் நன்றி தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் புலிததேவன், ஜோர்ஜ், தயாநிதி மாஸ்ரர் ஆகியோரும் பங்கேற்றனர். சந்திப்பு நண்பகல் 1.15 மணியளவில் நிறைவடைந்தது.

(லி)

### பெரும்...

தீயணைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோதும் த மகாளுந்து விட்டு எரிந்தமையினால் அவர்களால் எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

கட்டடத்திற்குள்ளே உயிருக்காக போராடியவர்களை மீட்பதற்காக இறங்கிய விமானப்படையின் தீயணைப்புப்பிரிவு அதிகாரிகள் மயக்கமடைந்தனர். அதனையடுத்து ஏனைய அதிகாரிகள் கட்டடத்திற்குள்ளே செல்லவில்லை.

கட்டடத்திற்குள் பத்து முதல் 20 பேர் வரை எரிகாயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்திருக்கலாம . அல்லது அவர்கள் இறந்திருக்கலாம் என பொலிசார் அச்சம் தெரிவித்தனர்.

கட்டடத்திற்குள் இருந்து அழுகுரல் சத்தங்களும், உதவி கேட்கும் சத்தங்களும், தண்ணீர் ,தண்ணீர் என்ற சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

இச்செய்தி அச்சுக்கும் போகும் வரை காயப்பட்டவர்கள் மீட்கப்பட்டவண்ணமிருந்தனர். இவர்களில் ரவிச்சந்திரன், நாகராஜா, தண்டபாணி, சலீம், அசாம், ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை - கொழும்பு நகரத்திற்கான மின்சார விநியோகம் உடனடியாக நிறுத்தப்பட்டது. மேலும் உயிர்ச்சேதங்களைத் தடுப்பதற்காகவே மின்சாரம் தடை செய்யப்பட்டது. பெருமளவு பொலிசாரும் ராணுவத்தினரும் நகரைச் சுற்றி காவலில் ஈடுபடுத்தப்பட்டனர்.(200)

### இயக்கச்சியில்....

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர், அம்புலன்ஸில் யாழ்.வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார். யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் உள்ள தமது உறவினர் வீட்டுக்கு வந்துவிட்டு, வவுனியா - வைரவப் புளியங்குளத்திலுள்ள இல்லம் திரும்பிக்கொண்டிருக்கும்போதே இவ் விபத்து நடைபெற்றுள்ளது.

இறந்தவரின் சடலம் முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டுசெல்லப்பட்டது. சம்பவம் பற்றி கிளிநொச்சி காவல் துறையினர் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

(லி)

### அகதிகளை...

விரிவாக ஆராயப்படலாமெனத் தெரியவருகின்றது.

தமிழகத்திலுள்ள 60,000க்கும் அதிகமான ஈழத்தமிழ் அகதிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோர் 9,000 பேரெனவும், மன்னாரைச் சேர்ந்தோர் 20,000 பேரெனவும், முல்லைததீவைச் சேர்ந்தோர் 4,000 பேரெனவும், திருகோணமலையைச் சேர்ந்தோர் 6,000 பேரெனவும், வவுனியாவைச் சேர்ந்தோர் 17,000 பேரெனவும் அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (03)

### கிழக்கில்...

தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று மட்டும் 140.8 மில்லி மீற்றர் மழை பெய்ததாக - மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

படுவான்கரைப் பகுதிகளில் மழையில் பெருமளவு வயல் நிலங்கள் அழிந்துள்ளன. இவற்றைப்பார்வையிட்டு, விவசாயிகளுக்கான நஷ்டஈட்டை மதிப்பிடுவதற்காக, மட்டு. அரசாங்க அரச அதிபர் மோனகுருசாமி தலைமையிலான உயரதிகாரிகள் குழுவினர் நேற்று அப்பகுதிகளுக்கு விஜயம் செய்தனர்..

காத்தான்குடி மற்றும் ஏறாவூர் பகுதிகளில் - பிரதான வீதியில் ஒரு அடி உயரத்திற்கு வெள்ளம் தேங்கியுள்ளதால், அப்பகுதிகளினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஒழுங்கான நகரக்கட்டமைப்போ, வடிகாலமைப்பு வசதிகளோ அமைக்கப்படாததால் - இந்த நிலை ஏற்பட்டதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.46 | 96.89 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.75 | 154.28 |
| 1 யூரோ | 98.10 | 99.27 |
| 1 சுவிஸ் பிராங் | 66.29 | 67.32 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 54.16 | 55.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.82 | 25.82 |

லாலாவின்
இலவச விளம்பர பத்திரிகைச் சேவை
ஆற்றல் மிக்க அ.னேகரின் வேண்டுகோளுக்கு இணங்க அறிஞர்களின் ஆலோசனைப்படி முதன்முறையாக 08 பக்கங்களைக் கொண்ட மாதமிரு முறை, இலவசமாக நமது ஈழமண்ணில் முதன் முதலில் வெளிவருகின்றது லாலாவின் இலவச விளம்பர பத்திரிகை
உரிமையாளர்
லாலா சோப்
அச்சுவேலி.
(சி-320)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.